# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 14 ஞாயிற்றுக்கிழமை (31-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 290


## தொண்டமான் காலமானார்



கொழும்பு, ஒக். 31

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கால்நடை அபிவிருத்தி, பெருந்தோட்டத்துறை பொதுவசதிகள் அமைச்சருமான சௌமியமூர்த்தி தொண்டமான் நேற்று தனது 87 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.

மாரடைப்பால் பாதிக்கப்பட்ட அமைச்சர் நேற்றுக் காலை நுவரேலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிகசிகிச்சைகளுக்காக அவர் கொழும்பு ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைச்குக் கொண்டுசெலலப்பட்டார்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இரவு 8.10 மணியளவில் அவர் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றிவளைப்பு தேடுதலில் கொழும்பில் 28 தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஒக் 31

கொழும்பு நகரில் நேற்றும் நேற்று முன்தினமும் இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தத் தேடுதலின்போது 300க்கும் மேற்பட்ட தமிழர்கள் விசாரணைக்கு உள்ளாகினர். இவர்களில் 28 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை, ஆமர் வீதி, பஞ்சிகாவத்தை, கிராண்ட்பாஸ், கொட்டாஞ்சேனை போன்ற பகுதிகளிலே இந்தத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இந்தச் சோதனைகளின்போது கிராண்ட்பாஸில் 20 பேரும் கொட்டாஞ்சேனையில் 8 பேரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-5-21)

# அம்பகாமம், ஒலுமடு பகுதியில் மீண்டும் மோதல் வெடித்தது!

## 60 படையினர் காயம்

வவுனியா, ஒக்ரோபர் 31

**வன்னியில் அம்பகாமம், ஒலுமடு ஆகிய பிரதேசங்களில் நேற்று மாலை மீண்டும் பெரும் மோதல்கள் வெடித்துள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று மாலை வரை இந்தப் பகுதியில் அமைதி நிலவியதாகவும் —

மாலையில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் வெடித்தன என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதல்களின் போது காயமடைந்த சுமார் 60 படையினர் அனுராதபுரம் வைத்தியசாலையிலும் அனுராதபுரம் இராணுவ ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்

[14 ஆம் பக்கம் பார்க்க]

## இளங் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

வவுனியா, ஒக். 31

வவுனியா கல்மடுப்பகுதியில் நேற்று முன்தினம் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முத்தையா திருப்புவனராஜா (வயது 38) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இவரது சடலம் மரண விசாரணை மற்றும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு கருணைமனு

சென்னை, ஒக். 31

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு குற்றவாளிகள் நால்வருக்கும் விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை ரத்து செய்யக் கோரி இந்திய ஜனாதிபதியிடம் கருணை மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகப் பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுச்

(13 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பகாமத்தில் உயிரிழந்த 24 புலி உறுப்பினர் விவரம்

வவுனியா, ஒக். 31

கடந்த 28 ஆம் திகதி அம்பகாமம் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் உயிரிழந்தவர்களின் 24 பேரின் விவரத்தை புலிகளின் குரல் வானொலி தெரிவித்துள்ளது. மேற்படி மோதல் சம்பவத்தில் உயிரிழந்தோர் விவரம்:-

★ கப்டன் வளவன் (முத்துக்குமார் குகதாஸ்—யாழ்ப்பாணம்)

★ லெப். மணியரசன் (முருகேசு ராஜகோபால் — திருமலை)

★ அருவி (சிதம்பரப்பிள்ளை செந்தமிழ்ச் செல்வன்—கிளிநொச்சி)

★ லெப். சிவகணேசன் (வேலுப்பிள்ளை சண்முகராசா—வவுனியா)

★ புலிக்குட்டி (கந்தையா சூரியகுமார் —மன்னார்)

★ கப்டன் தாமகன் (சின்னவன் சிவகுமாரன்—யாழ்ப்பாணம்)

★ கப்டன் ஞானதாஸ் (முருகையா பாலசுப்பிரமணியம்—வவுனியா)

★ லெப். பாஹாறின் (ஆறுமுகம் செல்வகுமார் — முல்லைத்தீவு)

(13 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேர்தலில் வென்றால் நாடாளுமன்றத்துக்கும் தேர்தல்

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 31

ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற்றால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு நாடாளுமன்றத் தேர்தல்களையும் நடத்தப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

செய்மதிமூலமாக மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நிகழ்ச்சி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கலஹாவில் உள்ள பாடசாலை ஒன்றில் இருந்து கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வு ஒன்றைக் காண்பதற்காகவே ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால் அரசியல் தீர்வு யோசனைகளை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் விதத்தில் நாடாளுமன்றத் தேர்தல்கள் உடன் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

[இ-6-21]

## 27 சடலங்கள் நேற்று செஞ்சிலுவையிடம் ஒப்படைப்பு

வவுனியா, ஒக். 31

அம்பகாமம் கிழக்குப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மோதல்களின் போது உயிரிழந்த விடுதலைப் புலிகளுடையவை எனத் தெரிவித்து 27 சடலங்கள் நேற்று வவுனியாவில் வைத்து படையினரால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

இவற்றில் 26 சடலங்கள் அம்பகாமம் ஒலுமடு ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்தவர்களுடையவை என்றும்—

ஒரு சடலம் மணலாறு பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்த புலி உறுப்பினருடையது என்றும்—தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை வவுனியாவில் வைத்து சடலங்களைப் பொறுப்பேற்றுக் கொண்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அவற்றை எடுத்துச் சென்று மாங்குளத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்ததாக குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(இ-5-6-164)

## பொதுவேட்பாளர் பற்றி நேற்றைய சந்திப்பிலும் இணக்கம் இல்லை

கொழும்பு, ஒக். 31

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை பொதுவேட்பாளராக நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் இன்னும் வெற்றி அளிக்கவில்லை.

நேற்று ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட், ஈரோஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் குமார் பொன்னம்பலத்தை அவரது வீட்டில் சந்தித்து மூன்று மணி நேரம் பேச்சு நடத்தினர்.

குமார் பொன்னம்பலத்தை பொதுவேட்பாளராக நிறுத்த இந்த நான்கு கட்சிகளும் விருப்பம் தெரிவித்ததாகவும் ஆனால் குமார் பொன்னம்பலம் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

பொது வேட்பாளர் நியமனம் தொடர்பாக ஈ. பி. டி. பி., தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளுடன் பேச்சு நடத்திவிட்டு மீண்டும் குமார் பொன்னம்பலத்தைச் சந்தித்து வலியுறுத்துவதென இந்த நான்கு தமிழ்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளன

## யாழ். மின்சார நிலை குறித்து படைத் தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். குடாநாட்டு மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக காங்கேசன்துறையில் நிறுவப்பட்டுள்ள ஜெனரேட்டர்களில் இரண்டு பழுதடைந்துவிட்டதாக யாழ். பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்திக் குறிப்பு ஒன்றையும் அதுவெளியிட்டுள்ளது.

யாழ். மக்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கென காங்கேசன்துறையில் பொருத்தப்பட்டுள்ள ஜெனரேட்டர் மூலம் 10 மெகாவோட்ஸ் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இந்த

[13 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வரத்தினம் நடராசா

கொக்குவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி செல்வரத்தினம் நடராசா அவர்கள் 30-10-1999 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் திருமதி செல்வநாயகி நவரத்தினம் (அதிபர், யா/ கோப்பாய் மகாவித்தியாலயம்), செல்வராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் அ. நவரத்தினம் (ஒய்வுபெற்ற உப-அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி) து. கனகராசா, திருமதி தங்கநாயகி செல்வராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வி கலாவாணி (2 ஆம் வருடம் விஞ்ஞானபீடம்), செல்வி திகழ்ஜோதி, செல்வி பத்மாசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அ. கந்தசாமி அ. குமாரசாமி, திருமதி ம. ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-10-99) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திரு அ. நவரத்தினம்
(மருமகன்)

நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

(70540)

## திருமதி தனபாக்கியம் குலவீரசிங்கம்

திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் வீதியை பிறப்பிடமாகவும் 10/12 பாமன்கடை லேன், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியம் குலவீரசிங்கம் 27-10-99 அன்று காலமானார்.

இவர் குலவீரசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற செல்லையா-தங்கமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ் சென்ற செல்லையா- கண்ணம்மா தம்பதிகளின் மருமகளும் சிவநாதன், சிவலோகநாதன், சிவகுமாரன் (கனடா), வனிதா, சாந்தினி, தினேஸ்குமார், கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தருமராசா (இந்தியா), காலஞ் சென்ற தனபாலசிங்கம், இராமலிங்கம் (கனடா), செல்வசோதி (இந்தியா) ஆகியோரின் சகோதரியும் கனகரத்தினம், இராசரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் கௌரியின் மாமியும், இரத்தினமலர், செல்வராணி, ஜெயராணி, செந்தில்குமார், சிங்கராசா, பூரணம், தர்மராசா ஆகியோரின் மைத்துனியும் மாலினி, முத்தமிழ் செல்வன், காந்திமதி, சசிகலா. தர்சினி, அரசி, தாரணி ஆகியோரின் மாமியும் அஜந்தா, அனுசா, விஜிதா, ஜனகன் ஆகியோரின் பெரியதாயாரும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-10-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு மகிந்தா மலர்ச்சாலையில் (591 காலி வீதி, கல்கிசை) நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. நந்தகுமார்

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

[70557]

## கந்தையா நடராசா

(நயினாதீவு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் பிரான்ஸை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா நடராசா நேற்று முன்தினம் 29 — 10 — 99 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா — சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் கண்மணி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் சுந்தரேஸ்வரன் (கனடா), கமலாதேவி (கனடா), கனகேஸ்வரன் (பிரான்ஸ்), கோகிலாதேவி (சுவிஸ்), கருணாதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் லோகேஸ்வரி (கனடா), மகாலிங்கம் (கனடா), சதீஸ்வரி (பிரான்ஸ்), இரத்தினசிங்கம் (சுவிஸ்), நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வினோத், வினோஷா, சுசேந்தன், ஜனனி, வேந்தினி, நிவேத், சுரேகா, சுஜீபன், தரமேஸ்வரா ஆகியோரின் அன்புப் பேரனும் பரமலிங்கம் (சுவிஸ்), கிருஸ்ணபிள்ளை (கிளிநொச்சி), இரத்தினசிங்கம் (பிரான்ஸ்), கனகரெத்தினம் (சுவிஸ்), புஸ்பராணி (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (நயினாதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் முத்துலெட்சுமி (சுவிஸ்), சரஸ்வதி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் ஞானமலர், நாகரெத்தினம், இராசலிங்கம் (பிரான்ஸ்), பரமேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நடராசா மற்றும் மகாலிங்கம் சந்திரசேகரம் (கனடா), அன்னலெட்சுமி காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் குணபாலலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கந்தையா பாலசுப்பிரமணியம் (பாலு)
(சகோதரன்)

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(70555)

# இன்று தேசிய வாய் சுகாதார தினம்

தேசிய வாய் சுகாதார தினம் இன்றாகும். அதனை ஒட்டி பிராந்திய பல் வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி உ. சிவபாதசுந்தரம் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருக்காக விடுத்துள்ள செய்திக் குறிப்பு இது.

பாடசாலையில் ஆசிரியர் ஊடாக மாணவர்களின் பற்சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1999 ஒக்ரோபர் 31 ஆம் நாள் மாணவர் காலையிலும் இரவிலும் சாப்பாட்டின் பின்னர் பற்களைத் துலக்குதலின் முக்கியத்துவத்தை ஆசிரியர்கள் பாடசாலைகளில்உணர்த்துதல் என்ற தொனிப் பொருளுடன் அனுட்டிக்கப்படுகின்றது.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் பாடசாலைகளில் இதற்கான செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்படுகின்றன.

சுகாதாரத் திணைக்களமும் கல்வித் திணைக்களமும் இணைந்து திட்டமிட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள வைத்திய நிறுவனங்களில் பணிபுரியும் பல் வைத்திய அதிகாரிகளினால் அவ்வப் பகுதிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரிகளின் சுகாதார உத்தியோகத்தர்களான பொது சுகாதார பரிசோதகர்கள்,பாடசாலைப் பற்சிகிச்சையாளர்கள் ஆகியோரின் பங்களிப்புடனும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள், நலன் விரும்பிகளின் அனுசரணையுடனும்ஒருநாள் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் தோறும் அமைக்கப்பட்ட சுகாதாரக் குழுக்களிலிருந்து ஆசிரியர்கள் இக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கலந்து கொண்ட ஆசிரியர்கள்,மாணவர் பற்சுகாதாரப் பழக்க வழக்கங்களைச் சரியான முறையில் கடைப்பிடிக்க உரிய ஏற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவார்கள்.

இச்செயற்பாடுகள் மூலம் அனைத்து மாணவர் சமுகாயமும் பற்சுகாதாரத்தை மேம்பட்ட நிலையில் வைத்திருக்க உரிய செயற்பாடுகளுக்குப் பழக்கப்படுத்தப்படும்.

'வாழ் நாள் முழுவதும் பற்களை வைத்திருத்தல்' என்ற துண்டுப் பிரசுரம் ஒன்றும் இதனை ஒட்டி வெளியிடப் பட்டுள்ளது.

(ஐ)

## ஒய்வு பெற்ற வங்கியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3'

யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் ஓய்வுபெற்ற வங்கியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு யாழ். வர்த்தக வங்கியின் அருகே அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி யாழ். நிலையத்தில் நடைபெற உள்ளது.


மதுபானப் பிரியர்களே!

இதோ வந்துவிட்டன!

வெளிநாட்டு மதுபான வகைகள்

பிரண்டி

- மார்டெல் வீ. எஸ்.
- ஹெனசி வீ. எஸ்.
- கொக்கட்டியர் வீ. எஸ். ஓ,
- ரேனால் வீ. எஸ். ஓ. பி.
- கமஸ் வீ. எஸ்.
- நெப்போலியன்

விஸ்கி

- ஜொனிவாக்கர் = றெட் லேபல்
- ஜொனிவாக்கர் – பிளெக் லேபல்
- பிளெக் அன் வைற்
- ஐ. எல். ஈ. ஒப் ஸ்கை

வைன்

- மார்டினி றோசோ வேர்மௌத்
- ருட்பேர்க்
- சின்சானோ (றோசோ. ட்ரை, பியன்கோ)
- வின்கார்னிஸ் மெடிக்கேற்றற்

நிதான விலையில் கிடைக்குமிடம்:

வாமாஸ்

121/2 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொ. பே. இல. 2989 (சி/9586)



எழுது வினைஞர் சேவை
போட்டிப் பரீட்சைக்கான
பயிற்சி வகுப்பு
31-10 99 (இன்று)
காலை 9.00 மணி
திகழ்
கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.
[சி/9608]



லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார்
நடித்த
நேதாஜி
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
070 - 212678
(70541)



ராஜா
யாழ்ப்பாணம்
கார்த்திக் = நக்மா
மற்றும் பலர் நடித்த
மேட்டுக்குடி
10 30, 2-00, 5-00
(சி/9529)



நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று முதல்
அர்ஜுன், குஷ்பு
ராதாரவி, வடிவேலு
நடித்த
ரோஜாவை
கிள்ளாதே
காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70562)


## பாராட்டுகின்றோம்

ஜனசக்தி சனசமூக நிலைய 1999ஆம் ஆண்டு செயலாளரும்
அரசடி அருள்மிகு செல்லப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை
செயலாளரும் சேவையாளருமான

திரு. இரத்தினம் செல்வராசா (J.P)

அவர்கள் 19—10—99 இல்
யாழ். மாவட்ட நீதிவான்
எஸ். ஏ. ஈ. ஏகநாதன் அவர்கள்
முன்னிலையில் சமாதான நீதிவானாக
பதவியேற்றதை ஒட்டி எமது நியைத்தின் சார்பில்
அவரை வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

ஜனசக்தி ச. ச. நிலையம்,
அரசடி வீதி, நல்லூர்.

(70550)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும்
முன்னாள் தலைவருமாகிய
வைத்திய கலாநிதி
எஸ். எஸ். அருளானந்தம்
அவர்கள்
அகில இலங்கை சமாதான நீதிவானாக
நியமனம் பெற்றதையிட்டு
எமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு
அவரது சேவை
எமது சங்க வளர்ச்சிக்கு மேலும் உறுதுணையாக
இருக்குமென எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
தென்மராட்சிப் பிரிவு (சாவகச்சேரி)
நிர்வாகிகள், உறுப்பினர்கள், தொண்டர்கள்.

மில் வீதி, மீசாலை கிழக்கு,
மீசாலை.

(70553)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய சமுதாயம் சுபீட்சமடைய

# சமாதானத்தினைப் பேணுவோம்

''வெள்ளைச் சிறகடித்து வெண்புறாவே ......'' என்று கவிஞர் ஒருவர் சமாதானத்தைப் பற்றி அழகாகப் பாடியுள்ளார். ஆம்! அன்று ஒரு நாள் உலகில சமாதானம் நிலவுகின்றதா என்பதனை அறிவதற்காக இறைவனால் வெண்புறா அனுப்பப்பட்டது. ஆனால் இன்றோ சமாதானம் என்பது மிகப்பெரிய கேள்விக் குறியாகவே தோன்றி மறைகின்றது. இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்குமேயாயின் எதிர்வரும் காலங்களில் சமாதானம் என்பது அற்றுப் போய்விடும் என்றே கூறலாம்.

இன்றைய உலகில் உள்ள ஏனைய நாடுகள் எல்லாம் இன்ரநெட், ஈமெயில் போன்ற பற்பல தொழினுட்ப சாதனங்களால் முன்னேறிக் கொண்டு இருக்கும் போது நம் நாட்டில் வசிக்கும் பலர் கணினியைப் பற்றிக்கூட பூரண அறிவின்றித் தவிக்கின்றார்களே! இதற்கெல்லாம் காரணம் யாது? சமாதானம் இன்மைதானே. இந்நிலைமை தொடர்ந்து நிலைக்குமாயின் இந்த நாடு மிகவளர்ச்சி குன்றிய நாடுகளான சூடான், எதியோப்பியா ஆகிய நாடுகளின் நிலைக்குக் கீழ் தள்ளப்படுவது திண்ணம். இந்த நிலை எமக்குத் தேவையா? எனவே இன்றிலிருந்து போரை ஒழித்துச் சமாதானத்தை நோக்கிப் புறப்படுவோம்.

''ஒரு நாட்டின் சமாதானத்தின் பெறுமதியை அதனால் வரும் சுகத்தின் பெறுமதியை ஒவ்வொரு மனிதனும் இழந்து விட்ட பின்னரே உணருகின்றான்'' ஆம்! நாம் அனைவரும் தற்போது இந் நிலையில் தான் இருக்கிறோம். போரினால் வரும் இன்னல்களை உணர்ந்த நாம் சமாதானத்தின் மூலம் வரும் சுகத்தினை இன்னமும் உணரவில்லையல்லவா? எனவே இன்றிலிருந்து அந்தச் சுகத்தினை உணர்வதற்கு அயராது உழைப்போம். எம் மனங்களில் சகிப்புத்தன்மை என்னும் நற்பண்பினை வேரூன்றச் செய்வோம். எம் மத்தியில் நிலவும் போர் என்னும் இருளை அகற்ற சமாதானம் என்னும் ஒளியைப் பரப்புவோம்.

''எந்தப் பிள்ளையும் [illegible]ல்ல பிள்ளை இந்த மண்ணிற் [illegible]றக் கையிலே அவன் நல்லவ[illegible] [illegible]வதும் தீயவன் ஆவதும் அ[illegible] [illegible]ன வளர்ப்பினிலே'' என்று [illegible]ரு பாடல் கூட உண்டு. இதே போன்றுதான் இந்தப் பூமியில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளையும் நல்ல பிள்ளையே. பிள்ளைகளிடையே காணப்படும் நற்பழக்கங்கள், தீய பழக்கங்கள் என்பன அவர்களின் தாயின் வளர்ப்பின் மூலமே அவர்களுக்கு ஏற்படுகின்றது. ஆகவே பெற்றோர்கள் மட்டும் சமாதானத்தை நோக்கிப் புறப்படாது. தமது பிள்ளைகளையும் அதில் ஈடுபடுத்தல் வேண்டும். அது மட்டுமன்றி அவர்களின் உள்ளங்களில் சகிப்புத்தன்மையை விதைக்க வேண்டும்.

''இன்று ஏடு தூக்கும் சிறுவர்கள் நாளை நாடு காக்கும் தலைவர்கள்'' என்று கூறுவார்கள். இன்றைய சிறுவர்கள் மூலமாவது நாளைய சமுதாயம் சுபீட்சமாக மலர வேண்டும். இன்று வீடுகளில் சகிப்புத்தன்மையுடன் வாழும் சிறுவர்கள்தான் நாளை இந்நாட்டில் சிறந்த ஒரு சமாதான குடிமகனாகத் திகழ்வான். பெரியோர்கள் தாம் மட்டும் சமாதானத்தினைப் பேணாது சிறுவர்களையும் சமாதானத்தினை

(12 ஆம் பக்கம் பார்க்க)

ச. தர்ஷிகா
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.

## மாதத்தின் சிறந்த கட்டுரை

''யுனெஸ்கோ'' ஆதரவில் பாடசாலைகள் ஊடாக நடத்தப்படும் கல்வி மூலம் சமாதானம் என்ற கருத்துப் பகிர்வை முன்னெடுக்கும் வகையில் ''உதயன் அனுசரணையுடன் இடம்பெறும் கட்டுரைப் போட்டியில்தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளில் இதுவும் ஒன்றாகும். செப்ரெம்பர் மாதத்திற்குரிய சிறந்த கட்டுரையாக இது தெரிவுசெய்யப் ட்டுள்ளது.

தரம் ஆறு தொடக்கம் தரம் 11 வரையுள்ள மாணவர்கள் இக்கட்டுரைப் போட்டியில் பங்கு பற்றலாம். கட்டுரைகள் 300 சொற்களுக்கு மேற்படாமலிருக்க வேண்டும். கட்டுரை மாணவரின் சொந்த ஆக்கம் என்பதனை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்துவது அவசியம்.

அந்தந்த மாதத்துக்குரிய கட்டுரைகள் குறிப்பிட்ட மாத இறுதிக்கு முன்னர் வந்துசேர வேண்டும். கட்டுரைகளை 'ஆசிரியர், உதயன், 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு கடித உறையின் மேல் மூலையில் ''யுனெஸ்கோ கட்டுரைப் போட்டி'' என்று எழுதி அனுப்புக.

**'உதயன்' அனுசரணையுடனான 'யுனெஸ்கோ' கட்டுரைப் போட்டி**

# நீங்கள் அனுஷ்டிக்கும் சகிப்புத்தன்மை எதிரியையும் நண்பனாக்கவழிசெய்யும்

**ஞாயிறு நற்பிரசாதம்**

நாம் வாழும் சமுதாயத்தை இன்று நோக்குங்கால் பல வித முன்னேற்றப் பாதைகளையும்; மனிதம் மாறி, மனித மாண்புகள் மழுங்கடிக்கப்பட்டு எதற்குமே மனித இனத்தை ஒப்பிட முடியாத நிலையில் இன்று எமது இனம் அதன் மாண்பை இழந்து நிற்கின்ற நிலையை நாம் காண்கின்றோம். நடைமுறையில் இந்த நிலை வருவதற்குப் பற் பல விதமான காரணங்களை நாம் சுட்டிக்காட்ட முடியும்.

இங்கு பொதுவாக நோக்குவோமாயின் கிறிஸ்து கூறிய வார்த்தைகளின் மூலம் தீயோனை எதிர்த்தலாகாது. அவனுக்குத் தயை காட்டி எம்மிடம் எதிர்பார்ப்பவனுக்குத் தேவைகளை இயன்ற அளவு முயற்சி செய்து அவனுக்கு ஒரு நிறைவை அளித்து அனைத்தையும் சகித்து வாழ வேண்டும் என்பதேயாம்.

மனித வாழ்வில் சகிப்புத்தன்மை என்பது இன்று கேள்விக்குறியாகிவிட்டது. காரணம் திடீர் முடிவுகள், திடீர் பேச்சுவார்த்தைகள், திடீர் தீர்மானங்கள். வாழ்வில் அனைத்துமே சிந்தித்துச் செயற்படுவதற்கு நேர காலம் போதாது. ஏன் இன்றைய நவீன உலகில் அனைத்துமே திடீர் என்றே நடைபெறுகின்றன. திடீர்அப்பம், திடீர் தோசை என்பதுபோல அனைத்தும் தயாராக்கப்பட்ட நிலையில் பொருள்கள்.

இதனைப் பாவிக்கின்ற மனித சமுதாயம் தன்னைப்பொருள்கள் போன்று ஆக்கிவிட நினைக்கின்றது போலும்.

இந்த நிலையிலே இறை வார்த்தை குறுக்கிட்டு நில், கவனி, சிந்தி, செயற்படு என்று அழைக்கின்றது.

நாம் மனிதர்கள் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர்கள் என்பதையே சில சமயங்களில் மறந்து விடுகின்றோம். சற்றுத் தரித்து நிற்பது என்பது நம்மால் முடியாத காரியமாகி விடுகின்றது. எம் வாழ்வில் முடியாதது எதுவும் இல்லை என்பதனை உணர்ந்து பயிற்சிப்படுத்துவோமானால் வாழ்வில் வெற்றி அடையமுடியும்.

எமக்கு முன் வாழ்ந்த பெரியவர்கள் வாழ்ந்து காட்டிய பாதைகள் அனைத்திலும் சகிப்புத் தன்மை காணப்பட்டது. பொறுமை இழையோடியது. அதனால் அ[illegible] ஏனையோர் பின்பற்றக்கூடிய ஒரு மேலான வாழ்நிலையை வாழ்ந்தார்கள்.

எதனையும் எடுத்தெறிந்து, வேண்டாவெறுப்பாக எவரையும் தூக்கி எறிந்து பேசுவதை முதலில் நிறுத்த வேண்டும். ஒரு சிறு துரும்பு என்றாலும் பல்லுச்குத்த உதவும் என்ற மனநிலையுடன் சிந்தனை உள்ளவர்களாக வாழவேண்டும்.

மனிதனை மனிதனாக மதிக்கப்படவேண்டும். அவனை அறிய வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும், பொறுமையாக அணுக வேண்டும், தட்டிக் கொடுத்து அன்பு செய்ய வேண்டும்.

இன்னும் எத்தனையோ விதமான செயற்பாடுகளை நமது தொடர்பு, உறவுகளின் ஒவ்வொரு தனி மனிதனும் கடைப்பிடிக்க வேண்டியவன் ஆகின்றான்.

சிந்திக்கும் திறன் கொண்ட மனிதன் சிந்தனை செய்ய வேண்டும். அந்த நேரத்தில் பல விதக் கண்டுபிடிப்புக்கள் வெளிக்கொணரப்பட்டு மனிதம் மலர்கின்றது. மனங்கள் விரிவடைகின்றன. எதிரியும் நண்பனாகின்றான் சகிப்புத்தன்மை தானாகவரத் தொடங்குகின்றது. எத்தனையோ சாதனங்கள் நிலை[illegible] [illegible] இந்தப் [illegible]போம் சிறப்பான வாழ்க்கையினை அமைப்போம். ★

அருட்சகோதரி கிறிஸ்ரலின்

## அதிரடி அரங்கு

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதேச செயலகம் ஒன்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தாமே தேடிக் கொண்டதுஎன்று சொல்லக் கூடிய ''சிக்கல்'' ஒன்றில் மாட்டிக் கொண்டுள்ளனர். அதனால் மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலையில் மட்டுமன்றித் திரிசங்கு சொர்க்க நிலையிலும் தவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தின் கிராம மட்ட உத்தியோகத்தர் ஒருவரே இந்த நிலையின் 'சூத்திரதாரி' அவர் உத்தியோகபூர்வ விடயம் சம்பந்தமாக அலுவலகம் சென்று அங்குள்ளவர்களைத் ''தாறுமாறாக'' ஏசியுள்ளார். தூஷண வார்த்தைகளையும் அலுவலகத்தில் பொரிந்து தள்ளிய இவர் அவ்வேளை போதையில் இருந்ததாகவும் குற்றச்சாட்டு.

இது குறித்து குடாநாட்டின் உயர் சிவில் நிர்வாக அதிகாரிக்கு முறையிடப்பட்டதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட கிராம மட்ட உத்தியோகத்தர் மிகத் தூரமான இடத்துக்கு மாற்றப்பட்டார். அதன் பின்னர் சாதாரண நிலையில் இருக்கும் போது மன்னிப்புக் கேட்கும் பாணியிலும். போதை தலைக்கேறிய நிலையில் மிரட்டும் பாணியிலும் அலுவலகம் சென்று அங்குள்ள ஊழியர்களுக்குத் தொல்லை கொடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தங்களது முறைப்பாட்டை வாபஸ் பெறுவது குறித்து உத்தியோகத்தர்கள் மறுபரிசீலனை செய்து கொண்டிருந்த வேளை உயரதிகாரி நியமித்த விசாரணைக் குழு முறைப்பாடு குறித்து விசாரிக்கச் சென்று விட்டது.

கிராம மட்ட உத்தியோகத்தர் தொடர்ந்து தொல்லை கொடுப்பார் என்பதனைக் கருத்தில் கொண்டு அவர் அலுவலகம் வந்த போது மது போதையில் இருந்தது குறித்துத் தமக்குத் தெரியாது என்றும் தூஷண வார்த்தைகளால் வசை பாடினார் என்று மட்டுமே விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்த உத்தியோகத்தர் மீண்டும் பழைய இடத்துக்கு மாற்றப்பட்டு விட்டார். வெற்றி வீரராக தயது பிரதேசத்தில் உலா வருகிறார்.

ஆனால் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து குறிப்பிட்ட பிரதேச செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் இப்போது கடமைக்குச் செல்வதில்லை. அதனால் அலுவலகப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் கஷ்டப்படுகிறார்கள். நிலைமையைச் சீராக்க வெளியார் இருவர் (அவர்களும் அதிகாரிகள்) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வரை முயன்று கொண்டிருந்தனர். அப்பாடா! அரசாங்க அலுவலகங்கள் படும் பாடு!

மயிலிட்டி, மாதகல் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மல்லாகத்தில் நலன்புரி நிலையம் ஒன்றில் கடந்த மூன்று வருடங்களாக வசிக்கின்றனர். இவர்கள் தொழிலாளர்கள் மொத்தம் 94 குடும்பங்கள்.

இந்த முகாம் அமைந்துள்ள காணியின் சொந்தக்காரர் வெளிநாட்டில் உள்ளார். காணிச் சொந்தக்காரரின் உறவினர் ஒருவர் தமக்குக் காணி தேவை என்று கூறி இடம்பெயர்ந்த மக்களை வெளியேறுமாறு தொல்லை கொடுத்து வருகிறார்.

இவர்கள் வெளியேறிச் சென்று தங்குவதற்கு பொருத்தமான வேறு இடத்தைக் கண்டுபிடிப்பது அதிகாரிகளுக்குக் கடினமாக உள்ளது.

இந்நிலை கண்டு இடம்பெயர்ந்தோர் தலையில் கை வைக்கின்றனர். தொடர்புடைய அதிகாரிகளோ செய்வதறியாது தலையைப் பிசைகிறார்கள்!

எங்கள் பிரதேச மக்களின் கருணைக்கும் மனித நேயத்துக்கும் அவை எவ்வாறு தேய்ந்து போயுள்ளன என்பதற்கும் இது நல்லதோர் உதாரணம்! அது மட்டுமா? சுயநலம் அப்பட்டமாக இங்கே பளிச்சிடுகிறது.

இப்போது அடிக்கடி அனைவரும் பேசும் விடயமாக முன்னிற்பது மின்சார விநியோகம். பல பகுதிகளையும் சேர்ந்தவர்கள் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்ட மின்சாரம் தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று முறைப்படுகிறார்கள். மின்சாரத்தைப் பெறுவதற்குச் செல்வாக்குத் தேவை என்றும் அதிகாரிகள் மக்களுக்கு வசதியாக அன்றி தங்களுக்கு வசதியாகவே செயற்படுவதாகவும் குறைப்படுகிறார்கள்.

ஆனால் மின்சார விநியோகம் கிடைத்தவர்களோ நாளாந்தம் முணுமுணுக்கிறார்கள். அடிக்கடி மின்சாரம் நின்று விடுகிறது. பிள்ளைகள் படிக்கும் வேளையிலும் திடீர் திடீரென மின்சாரத்தை வெட்டுகிறார்களே! இவர்கள் என்ன பெயர் எடுப்பதற்காகவா மின்சாரம் தந்தார்கள் என்று கொதிக்கிறார்கள்!

மின்சார சபை அதிகாரிகளோ, சில பல மாதங்களாக மக்களுக்குக்காரணம் சொல்லிப்பார்த்தார்கள். நிலைமை விரைவில் திருந்தும் என்று எதிர்பார்த்து மக்களைச் சமாதானப்படுத்தியும் வந்தார்கள். இப்போது ஒன்றும் சீராகாத இயலாத. கட்டத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ''கூல் எயர்'' நிறுவனத்துக்குக்கடிதம் எழுதிவிட்டுக்காத்திருக்கிறார்கள்.

உங்களால் எந்தளவு மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்க முடியும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவியுங்கள் என்று உற்பத்தி நிறுவனத்திடம் கேட்டிருக்கிறார்கள்.

மொத்தம் 10 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து தரமுடியும் என்று உற்பத்தி நிறுவனம் தெரிவித்திருந்தது. ஆனால் இப்போது — பல மாதங்களாக — 8 மெகாவாட் மின்சாரமே சபைக்கு விநியோகிக்கப்படுகிறது. அதுவும் பல நாள்களில் 7, 6 என்று கீழ் நோக்கிப் போய் விடுகிறது. பல சந்தர்ப்பங்களில் திடீரென மின்சாரம் முற்றாக இல்லாமற் போய்விடுகிறது.

மின் உற்பத்தி நிறுவனத்தின் பதிலைப்பொறுத்துத் தான் மின்சார விநியோகம் அமையும். என்று எதிர்பார்க்கலாம். நிலைமை திருந்துமா அல்லது மேலும் மோசமடையுமா என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள். மின் பாவனையாளர்களே! மின் விவகாரமல்லவா திடீரெனப் பொசுங்கியும் போகலாம் என்று அஞ்சுகிறீர்களா!

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SALE SALE

இதோ!
உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!

மகாநதி வழங்கும்
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
07-11-99 வரையுமே!

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
தீபாவளிப் புடைவை ரகங்களுக்குக் கழிவு உண்டு.

மகாநதி
புடைவை அகம்

(முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான ஸ்தாபனம்)

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T. P. 2552

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்கு
பிரத்தியேகக் காட்சி அறைகள்

16, நவீன சந்தை,
(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

நவீன சந்தை,
(மேல்மாடி)
சாவகச்சேரி.

[சி/9591]

## மீன் விலை உயர்வு

அரியாலை, ஒக். 31

யாழ். நகரில் மீனின் விலை திடீரென உயர்ந்துள்ளது.

பாஷையூர், குருநகர், கொட்டடி, கொழும்புத்துறை போன்ற மீன் சந்தைகளில் மீனின் விலை அதிகரித்துக் காணப்படுகிறது.

(ஐ-17)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 31

'இலங்கை அரசியல் வரலாற்றில் பிறேஸ் கோர்டில் சம்பவம் — ஒரு வரலாற்று நோக்கு என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு ஆரியகுளம் பகுதியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர் ஆ. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

(ஐ-க)

## 225 மில்லிமீற்றர் மழை பதிவு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மாவட்டத்தில் இந்த மாதம் 29 ஆம் திகதி வரை 225.6 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக திருநெல்வேலியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாதம் 29 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் 19 நாள்கள் மழை பெய்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஐ-5)

மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களுக்கு
முக்கிய அறிவித்தல்

1-11-99 தொடக்கம் 6-11-99 வரை.

சகல புடைவை வகைகளுக்கும் 7½ வீத விசேட விலைக் கழிவு வழங்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம.
(சி/9607)

லண்டன் விழுதுகள் ஆதரவில்
யா/ கம்பர்மலை அ. த. க. பாடசாலை

## பழைய மாணவர் சங்கம்

நடத்தும்

## பாராட்டு விழா

இடம்: பாடசாலை மண்டபம்

நாள்: 31-10-1999 ஞாயிறு பி.ப. 2.00மணி

தலைவர்: திருமதி கை. இந்திரன்

தேசிய ரீதியில் எமது தாய்க்குப் புகழீட்டித் தந்த செல்வி சி. பிரேமியா அவர்களைப் பாராட்டும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சார் சமூகத்தையும் சகல பழைய மாணவர்களையும் வேண்டிக் கொள்கின்றோம்.

விழா அமைப்புக் குழு
பழைய மாணவர் சங்கம்,
யா/கம்பர்மலை அ. த. க. பாடசாலை.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

[70551]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கதிரவேலு சந்திரராசா

(பொதுமுகாமையாளர், வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.
தலைவர், நலன்புரிச் சங்கம், வலிகாமம் கொத்தணி)

மலர்வு
05--05--1953

உதிர்வு
31--10--1995

அறிவில் பூத்த மலர் சூரியகதிர் இடம்பெயர்வில் வாடியதோ?
அனுபவத்தில் சிறந்து நின்ற அண்ணாவுக்கு ஆகியது என்னவோ?
இறக்கும் வரை கூட்டுறவுக்காய் நின்றவரே!
நீர் மறைந்து ஈரிரண்டு ஆண்டுகள் சென்றனவோ?
கூட்டுறவுச் சேவையினால் மனமெல்லாம் நிறைந்தவரே — தங்களின்
மறைவால் மனமெல்லாம் வாடி நிற்கின்றோம்.
வலிகாமம் கொத்தணி, ஊ. ந. பு. சங்க வளர்ச்சிக்கு குன்றாகி நின்றவரே!
உமது சேவையை சொல்லாலே எழுதிவிட முடியாதையா!
சேவையும் செயற்றிறனும் அறிவும் அனுபவமும்
தன்னகத்தே கொண்டமைந்த சந்திரராசாவே!
தன்னிகரில்லாத உத்தமராம் உங்களை
நாமிழந்து தவிக்கின்றோம் தரணியிலே.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
வலிகாமம் பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி

**D. D. Abeysinghe**
(Former President, Sri Lanka Red Cross Society)
67, Ambalangoda Road. polgasovita.

எமது தாய்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த துயரத்தை அன்னாரின் குடும்பத்தினருக்கு சமர்ப்பிக்கிறோம்.

நிர்வாகம், அங்கத்தவர்கள், தொண்டர்கள்.
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக்கிளை.

[சி/9606]

## 34 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
28 — 11 — 1948



உதிர்வு
28 — 09 — 1999

திருமதி
### இராசேஸ்வரி கோபாலன்

திதி: 31 - 10 - 1999

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
அம்மா, சகோதரிகள், மகன், மகள்,
மைத்துனர்மார், குடும்பத்தினர்.

குளங்கரை, கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(70544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் [இம் மாதம் 23 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

யாழ்ப்பாணம்

[112572ஏ], [114271ஏ], [114271பி], [118115ஏ], [119742ஏ], [119742பி[, [119742சி], [119764ஏ], [119764பி], [119764சி], [119764டி], [120292ஏ], [120505ஏ], ]120548ஏ], [120548பி[, [120548சி], [120558ஏ], [120572ஏ], [120572பி], [120572சி], [120572டி], [120594ஏ], [120594பி], [120597ஏ], [120611ஏ], [120611பி], (120625ஏ), (120625பி), (120699ஏ), (120699பி), (120699சி), (120735பி), (120735சி), (122414ஏ), (122424ஏ), (122472ஏ), (122488ஏ), (122488பி), (122499ஏ), (122516ஏ), [122531ஏ], [122535ஏ], [122535பி], [122550ஏ[, [122551ஏ], [122569ஏ[, [122570ஏ[, [122584ஏ], [122584பி], ]122584சி], [122591ஏ[, ]122591பி], [122608ஏ[, [122608பி], [122612ஏ], [122612பி], [122612சி], [122612டி], [122613ஏ], [122613பி], [122613சி], [122616ஏ[, [122629ஏ], [122646ஏ], [122646பி[, [122647ஏ[, [122647பி], ]122647சி], [122651ஏ], [122656ஏ[, [122656பி], [122656சி], [122666ஏ[, [122687ஏ], [122687பி], [122687சி], [122693ஏ], [122693பி], [122721ஏ], [122721பி], [122733ஏ], [122733பி], [122743ஏ], [122773ஏ], [122800ஏ], [122826ஏ], [122878ஏ], [122891ஏ], [124465ஏ], [124499ஏ], [124504ஏ], [124511ஏ].

★

கோப்பாய்

(123131ஏ), (123131பி), (123137ஏ), (123138ஏ), (123171ஏ), (123192ஏ), (123202ஏ), (123202பி), (124492ஏ).

★

மருதங்கேணி

(115234ஏ).

நல்லூர்

(104279ஏ), (109932ஏ), (109941ஏ), (117516ஏ), (117575ஏ), (117576ஏ), (119637ஏ), (119637பி), (123173ஏ), (123173பி), (123188ஏ], (123195ஏ), (123216ஏ), (123220ஏ), (123220பி), [123227ஏ[, [100734ஏ], [120507ஏ], [120507பி], [120507சி], [120530ஏ], ]120530பி], [120530சி[, [120531ஏ], [120534ஏ], [120534பி], [120534சி], [120567ஏ], [120595ஏ], [120595பி], [120662ஏ], [120662பி] (120668 ஏ), (120668 பி), ]120688 சி), (122449 ஏ], (122527 ஏ), [122527 பி[, (122603 ஏ[, (122603 பி], [122617 ஏ), (122617 பி), (122674 ஏ), (122727 ஏ), (122731 ஏ), [122774ஏ), (122808 ஏ), (122872 ஏ], (124470 ஏ),

பளை

(123706 ஏ), (123706 பி], (123706 சி], (123707 ஏ).

பருத்தித்துறை

(085434 ஏ], (085434 பி[, (118707 ஏ), [118707 பி[, (118807 ஏ], ]118871 ஏ), (118876 ஏ], [118979 ஏ[, [119095 ஏ], [119137 ஏ], (119782 ஏ), (119839 ஏ[, ]119871 ஏ), (119914 ஏ[, ]119914 பி[, ]119914 சி), ]119966ஏ), (119966பி), (119966சி), (120083ஏ), (120196ஏ), (120196பி), (121973ஏ), (122080ஏ), (122080பி), (122098ஏ), (122099ஏ), (122216ஏ), (122353ஏ), (122353பி), (122354ஏ), (122354பி), (122354சி), (188742ஏ), (188742பி).

உடுவில்

]125419ஏ), [125419பி),

வேலணை

[12130ஏ), [12175ஏ], [12175பி], [12175சி], [12190ஏ], (12190பி), [12190சி], [12193ஏ], [12204ஏ], [12205ஏ), [12214ஏ], [12214பி], [12221ஏ[, [12221பி], [12231பி], [12341ஏ]. [12343ஏ], [12343பி], [12343சி], [12343டி], [12344ஏ], [12348ஏ], ]12349ஏ], [12349பி], (12350ஏ], [12351ஏ), (12356ஏ], (12356 பி], (12357ஏ], [12367ஏ], (12370ஏ),

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் [இம் மாதம் 24 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு.

சங்கானை

(113254ஏ), (113254பி), (119452ஏ), (119453ஏ), (121704ஏ), (121747ஏ), (121774ஏ), (121779ஏ), (121829ஏ), (121829பி), (121830ஏ), (121830பி), (121830சி), (123371ஏ), (123371பி), (123425ஏ), (123425பி), (123567ஏ), (121814ஏ),

★

சாவகச்சேரி

(123299ஏ),

யாழ்ப்பாணம்

(115812ஏ), (119731ஏ), (120500ஏ), (120613ஏ) (122412ஏ), (122426ஏ), (122426பி), (122426சி), (122443ஏ), (122443பி), (122447ஏ), (122447பி), (122448ஏ), [122458ஏ], (122473ஏ), [122550ஏ], (122553ஏ), (122553பி), (122554ஏ), ( 22554பி), (122554சி), [122566ஏ] (122566பி), (122575ஏ), (122597ஏ), (122597பி), [122597சி), (122597டி), (122597ஈ) [122625ஏ], (122625பி), [122680ஏ], [122700ஏ], (122741ஏ], (122741பி], [122781ஏ], (12279ஏ], (122799ஏ), [122799பி], (122827ஏ), [122845ஏ], (122859ஏ], (122870ஏ), (122879ஏ), (122880ஏ), (122890ஏ), ]122894ஏ], (124464ஏ], [124468ஏ], [124479ஏ], [124479பி], (124498ஏ], (124522ஏ], [124524ஏ], [124538ஏ], (124538பி], [124538சி], [124545ஏ], [124577ஏ],

★

கோப்பாய்

]116760ஏ], ]116760பி], [121094ஏ], [121118ஏ], [121118பி], [121143ஏ!, [121175ஏ], [121175பி], [121201ஏ], [121207ஏ], ]123140ஏ), (123140பி).

மருதங்கேணி

(120205ஏ).

நல்லூர்

117518ஏ), (117519ஏ), (123001ஏ), (123001பி), (123001சி), (123001டி), (123002ஏ), (117591ஏ), (122504ஏ), (111744ஏ), (12919ஏ), (118366ஏ), (119433ஏ), (121832ஏ), (11863ஏ), (123372ஏ), (123406ஏ), (123447ஏ), (123454ஏ), (123484ஏ), (123537ஏ).

பருத்தித்துறை

(122137ஏ), (122374ஏ), (122374பி),

சண்டிலிப்பாய்

(118278ஏ), (118283ஏ), (121434ஏ), (121434பி), (121750ஏ), (121778ஏ), (123387ஏ), (123387பி), (123471ஏ), (123503ஏ), (123513ஏ), (123513பி),

உடுவில்

(121601ஏ), (121698ஏ), (121824ஏ), (121851ஏ), (123382ஏ), (123428ஏ), (123428பி), (123455ஏ), (123508ஏ).

[தொடரும்]


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி பி. உருத்திராகன் அவர்களின்

தாயார்

திருமதி புவனேஸ்வரி ஞானப்பிரகாசம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரது துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,

யா/கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்

((70521)



A GURANTEED PRODUCT

KOBE

ANTENNA BOOSTER

NO:1 SELLER IN SRI LANKA

FROM LANKA NIPPON

AVAILABLE NATIONWIDE

ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE

LANKA NIPPON

18, KEYSER STREET, COLOMBO-11

Tel: 324726, 437735 FAX: 437736

(சி/9184)


## சர்வஜன வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக் 31

வடக்கு — கிழக்கு இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு ஜனாதிபதியால் மேலும் ஒரு வருடத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு — கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டதும்—

இரு மாகாணங்களும் தனித்தனி அலகுகளாக இருப்பதா? அல்லது இணைந்து இருப்பதா? என்பதைத் தீர்மானிக்க ஒரு வருட காலத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததும் தெரிந்தவையே.

எனினும் இந்த சர்வஜன வாக்கெடுப்பு அரசினால் வருடாந்தம் பின்போடப்பட்டு வருகிறது.

கிழக்கில் நவம்பர் 16 ஆம் திகதியும் வடக்கில் டிசெம்பர் முதலாம் திகதியும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ-3-4)

## நாடகம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்ட மருத்துவ மாணவர்களால் அளிக்கைசெய்யப்படும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'வேள்வித் தீ' நாடகம் பல்கலைக் கழகத்தில் இடம் பெறுகின்ற பகிஷ்கரிப்புப் [illegible] ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(க.

## இளைஞர் கழக கட்டடத் திறப்புவிழா

வேலணை, ஒக், 31

புங்குடுதீவு செந்தமிழ் இளைஞர்கழக கட்டடத் திறப்புவிழா நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு கழகத் தலைவர் ப. ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இளைஞர் சேவை அதிகாரி க. நித்தியானந்தனும், சிறப்பு விருந்தினர்களாகக் கிராமசேவை அலுவலர்கள் ப. விநாயகமூர்த்தி, ந. தனபாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ-167)


## இரண்டாம் ஆண்டு நினைவில்



செல்லையா ஆனந்தராஜா

தோற்றம்: 17 – 02 – 1934

மறைவு: 31 – 10 – 1997

அன்பின் இலக்கணமாய் வாழ்ந்த எம் அப்பாவே!
'அன்பு' என்றால் என்ன என்பதை எமக்கு
அறியத் தந்த அன்புத் தந்தையே!
ஆறாது எம் மனம் நின் பிரிவால்

- குடும்பத்தினர்

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

(சி/9602)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறோட்டன் கண்காட்சியும் விற்பனையும்

எதிர்வரும் 13 – 11 – 99, 14 – 11 – 99

காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை

**பிளான்ட் பரடைஸ்,**

152/2 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

[70462]

## சரண்ஜா கொமினிக்கேசன்

**எலக்றிக்கல்ஸ் அன் எலக்ரோனிக்ஸ்**

உள்நாடு, வெளிநாடு தொலைத்தொடர்புகள் மற்றும் மின்சாதனப் பொருள்கள், மின்னியல் பொருள்கள் விற்பனையும் திருத்தும் இடமும்.

T.P. 021 – 3326

இல. 538, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அருகில்.

(70494)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. யோசப் யோண்சிங்கம் J.P

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளரும் சிறைச்சாலை திணைக்களம், பிறைற் ஒக்ஷன் சென்ரர் உரிமையாளரும்)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரும், சென். ஹென்றிஸ் கல்லூரியின் பழைய மாணவரும், ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலையத்தின் தலைவரும், றோ.க.த.க பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழு உறுப்பினரும், கிளை 11 இன் செயலாளரும், வடபிராந்திய தொலைத்தொடர்புச் சேவை சங்கத்தின் உப செயலாளரும், சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாக சபை உறுப்பினரும் [சண்டிலிப்பாய்], சமூக சேவையாளருமான திரு. யோண்சிங்கம் அவர்கள் 17—09—99 அன்று யாழ். பதில் நீதிவான் திருமதி இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளதையிட்டு அவரது சேவை மேன்மேலும் வளர வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஐ.ச.ச. நி. உறுப்பினர்கள்
ஆனைக்கோட்டை.

[70449]

## 31-ம் நாள் நீங்கா நினைவாக



மலர்வு 02 — 04 — 1922

உதிர்வு 01 — 10 — 1999

அமரர்

### சின்னர் அப்புக்குட்டி

(செல்லத்துரை)

நெஞ்சில் நிறைந்திருக்கும் அன்பரின் மறைவை ஒட்டிய சகல நிகழ்வுகளிலும் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
பேரமக்கள் குடும்பத்தினர்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி/9584)

## நல்லின ஆடுகள் வழங்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நல்லின ஆடுகள் கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்படவுள்ளன.

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட உதவியுடன் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நல்லின ஆடுகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் கால்நடை வளர்ப்பாளர்களை நவம்பர் 10 ஆம் திகதிக்கு முன் அத்தியடியிலுள்ள சங்கத்தின் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## விண்ணப்பம் கோரல்

வலி. வடக்கு, ஒக். 31

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டாயிரம் ஆண்டுக்காகப் புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தொழில்நுட்பப் பயிற்சித் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த (சாதாரண) தரம் மற்றும் அதற்குக் குறைந்த வகுப்புகளில் சித்தியடைந்தவர்கள் தமிழ், ஆங்கிலமொழி மூலம் கற்பதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 8 ஆம் திகதியாகும். [உ-3-8-86]

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## 2000 ஆண்டுக்கான இலக்கத் தகடுகள் வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

கீழ்க்காணும் தகடுகள் தயாரித்து வழங்குவதற்கான கூறுவிலை 1999 – 11 – 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. துவிச்சக்கர வண்டி உரிமத் தகடுகள்.
2. வண்டில் உரிமத் தகடுகள்.
3. நாய் உரிமத் தகடுகள்.

கூறுவிலைக்குரிய படிவத்தை மீளளிக்கப்படாத ரூபா 50/- செலுத்தி தலைமையலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ந. திரிலோகநாதன்,
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(சி/9597)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### உயர்திரு. சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன்

ஜே. பி. யூ. எம்.

(மல்லாகம் பிரதேச சபைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்)

26-10-99 அன்று அமரரான

சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் அவர்களின்

மறைவையிட்டு துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
அளவெட்டி - மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்

(சி/9599)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

சந்தைகள்/இறைச்சிக்கடைகளுக்கான

## கேள்வி அறிவித்தல் - 2000

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 1999-11-11 பிற்பகல் 3.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 1999-11-12 முற்பகல் 10.00 மணிவரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி: 1999-11-12 முற்பகல் 11.00 மணி
04. ஏனைய விவரங்கள் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்கப் படாதவை) |
|---|---|---|---|---|
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 1. சத்தியக்காட்டுச் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | | 150,000/- | 2,000/- | 200/- |
| 2. பல்லசுட்டி சந்தை | | 5,000/- | 500/- | 200/- |
| 3. தொல்புரம் மத்திய சந்தை | | 5,000/- | 500/- | 200/- |
| 4. பொன்னாலை சந்தை (மூளாய்) | | 10,000/- | 1,000/- | 200/- |
| **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 1. மரக்கறிச்சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | | 400,000/- | 5,000/- | 200/- |
| 2. மீன் சந்தை | | 165,000/- | 2,000/- | 200/- |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 1. வட்டுக்கோட்டை பொதுச் சந்தை (இறாத்தலடி) | | 6,500/- | 1,000/- | 200/- |
| 2. சங்கரத்தை தற்காலிக சந்தை | | 32,000/- | 1,000/- | 200/- |
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 50/- | 8,000/- | 500/- | 200/- |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | 50/- | 5,000/- | 500/- | 200/- |
| **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 100/- | 100,000/- | 3,000/- | 200/- |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 10,000/- | 1,000/- | 200/- |
| 3. கருவாட்டுக்கடை | 75/- | 5,000/- | 500/- | 200/- |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 75/- | 10,000/- | 1,000/- | 200/- |
| 2. ஆட்டிறைச்சிக்கடை - கேள்விக்காரர் கடை ஒழுங்கு செய்தல் வேண்டும். | | 5,000/- | 500/- | 200/- |
| **அராலி உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை - கேள்விக்காரர் கடை ஒழுங்கு செய்தல் வேண்டும். | | 10,000/- | 1,000/- | 200/- |

ந. திரிலோகநாதன்,
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
சுழிபுரம்.

(சி/9596)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/அளவெட்டி வடக்கு

## அ. மி. த. க. பாடசாலை

## புலமைப் பரிசில் பரீட்சை - 1999

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த

**செல்வி ப. கௌதமி - 126 புள்ளிகள்**

**செல்வன் இ. கஜந் - 120 புள்ளிகள்**

ஆகிய மாணவர்களையும் அவர்களை வழிநடத்திப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் மேலதிக வகுப்புக்களை நடத்திய ஆசிரியர்கள் திரு. த. சிறீகரன், செல்வி செ. செந்தில்வாணி ஆகியோரையும் விசேடமாக எங்கள் அதிபர் திரு. செ. பி. இளமுருகனார் அவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும்
பழைய மாணவர்களும்.

(70467)

# சமுர்த்தி குழுக்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரையும் 12 சமுர்த்திக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். பிரதேச செயலர் பிரிவிலுள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் 7 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களே உள்ளதால் இரு பிரிவுகளுக்கு ஓர் ஊக்குவிப்பாளர் என்ற அடிப்படையில் அவர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

(ஐ-5)

# நூல்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, ஒக். 31

பளை வைத்தியசாலையில் இயங்கும் நூல் நிலையத்துக்கு பெரியபளை கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினர் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். 'வார்ட்'டுகளில்தங்கியுள்ள நோயாளர்களுக்கென இந்த நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ம-117)

# பத்தமேனி வீதி திருத்தம்

வளலாய், ஒக். 31

இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த பத்தமேனி விமான நிலைய வீதி புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபை 10 லட்சம் ரூபாவை இதற்கென ஒதுக்கியுள்ளது.

(ம-198)

# புதிய கிராம சேவையாளர்

கொழும்புத்துறை, ஒக் 1

யாழ். கொட்டடி ஜே- 83 பிரிவுக்கு புதிய கிராமசேவையாளராக எஸ். மகாலிங்கம் கடந்த 20 ஆம் திகதி முதல் இடமாற்றப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இவர் கொழும்புத்துறைநெடுங்குளம் (ஜே-61) பிரிவில் கடமையாற்றியுள்ளார்.

(ம-30)

வாழ்க! வளர்க! என

# வாழ்த்துகின்றோம்

யா/நீர்வேலி சி.சி த.க. பாடசாலை

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 1999

| | |
|---|---|
| கணேசராசா பரநிருபன் | 140 |
| தியாகராசசர்மா மயூரகிரி | 127 |
| சிவசிந்துஜா பொன்னுத்துரை | 122 |
| தயாராஜி மகாலிங்கம் | 119 |

மேற்படி சித்தியடைந்த மாணவர்களை வாழ்த்திப் பாராட்டுவதுடன் இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை.

(சி/ 9577)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ அச்சுவேலி மகாவித்தியாலயம்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 1999

| | | |
|---|---|---|
| செல்வி | சி. கஸ்தூரி | 140 |
| செல்வன் | சி. பங்கஜன் | 128 |
| செல்வி | ஞா. பகிரதி | 122 |
| செல்வி | கு தீபவாணி | 122 |
| செல்வி | இ. சஸ்மிதா | 121 |

சித்தியடைந்த ஐந்து மாணவர்களையும் இவர்களை அயராது ஊக்குவித்த அதிபர், உப அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அ.பி. சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(70493)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் – 1999

| | | மாவட்ட நிலை |
|---|---|---|
| அபிராமி அமிர்தலிங்கம் | 161 | 19 |
| லக்சனா சிவராஜா | 134 | |
| ஜீவிதா துரைசிங்கம் | 132 | |
| துவாரகா மரீந்திரன | 128 | |
| செல்வவதனா துரைக்கிளி | 126 | |
| மோகனப்பிரியா ஆனந்தகுமார் | 125 | |

மேற்படி மாணவிகளைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர்களது உயர்விற்கு உந்துசக்தியாக அமைந்த கல்லூரி அதிபர், கல்விபுகட்டிய ஆசிரியர்கள், ஊக்குவித்த பெற்றோர் அனைவரையும் மனங்கனிந்து பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்

(சி/9582)

# கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்

எமது அயல் சங்கமரன்

புலோலி ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர்

## அமரர் சிவா சுப்பிரமணியதேவா

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினர்க்கும் புலோலி ப. நோ. கூ. சங்கத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர், பங்காளர்,
கட்டைவேலி, நெல்லியடி
ப. நோ கூ. சங்கம்,
கரவெட்டி

(சி/9587)

# 15ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



அமரர்

## துரையப்பா இராசரெத்தினம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 – 07 – 1919 | 17 – 10 – 1984 |

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எமக்காகவே வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே ஐயா! நாங்கள் சென்ற இடமெல்லாம் சீர் பெற எமக்கு வழிகாட்டினீர்கள் ஐயா! ஆண்டுகள் எத்தனை மறைந்தாலும் உங்களின் நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாது ஐயா!

பாசமிகு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வளாக வீதி.
திருநெல்வேலி தெற்கு.
யாழ்ப்பாணம்.

(70405)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

## 2000 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் பின்வரும் இறைச்சிக் கடைகளை 2000 – 01 – 01 முதல் 2000 – 12 – 31 வரை குத்தகைக்கு ஏற்று நடத்துவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 9 – 11 – 1999 ஆம் திகதி மாலை 2. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை உரியபடி படிவக்கட்டணம், கேள்வி வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி 08 – 11 – 1999 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 10 – 11 – 1999 ஆம் திகதி காலை 10. 00 மணிக்கு திறக்கப்படும்.
2. சித்திகரக் கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பங்கை உடன் செலுத்தி மீதித் தொகையை 10 சமதவணைப் பணங்களாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும், இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.
3. போதிய காரணங்களுக்காக கேள்விகளை நிராகரிக்கவோ, இரத்துச் செய்யவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்விப் பிணைப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1. பளைச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 200/- | 500/- | 60, 500/- |
| 2. பளைச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 200/- | 500/- | 4000/- |

கு. ந. பாலச்சந்திரன்
செயலாளர்,
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பளை.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பிரதேச சபைப் பணிமனை,
பளை. 25 – 10 – 1999.

[சி/9551]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைவஞ்சலி



## அமரர் நாகமணி இரத்தினவேல்

(F.C.M.A. (Lond), F.P.F.A, Dip. in P.F.M, Dip in Accy S.L. Ac S - Class - I)

(முன்னாள் சிரேஷ்ட கணக்காளர் - கடற்றொழில் நீரியல்வள அமைச்சு பிரதம கணக்காளர்- பொலீஸ் திணைக்களம், உதவி நிதியாளர்-விவசாயபீடம் யாழ். பல்கலைக்கழகம்.)

மலர்வு 14 - 07 - 1935 உதிர்வு 23 - 10 - 1997

திதி: 31 - 10 - 1999

அன்பு அப்பாவே!

ஈடுசெய்ய முடியாத உங்கள் இழப்பின்சோகத்தை ஆற்ற முடியாது தவிக்கும் எம் இதயம், தங்கள் ஆத்மா என்றும் எல்லாம் வல்ல இறைவனின்பாதமதில் நித்தியப் பேரின்பப் பெருவாழ்வு பெற இத்திதியில் எம்பெருமானை இறைஞ்சுகிறது

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

126 A, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி:
22, புறாடி லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம். (70389)

---

# விரைவில் செயற்பாட்டு அறைக் கட்டடம்

நயினாதீவு கணேசா கனிஷ்ட வித்தியாலய 9 ஆம் தர மாணவர்களுக்கான புதிய செயற்பாட்டறைக் கட்டடம் மிக விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்திற்கான அத்திவாரக்கல் சம்பிரதாய பூர்வமாக அண்மையில் நடப்பட்டது.

சுமார் பதின்மூன்றரை இலட்சரூபா செலவில் அமையவிருக்கும் இந்தக் கட்டடத்துக்கான ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு தீவக கல்வி வலயம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

[ம-'67]

---

# தேவை

அனுபவமுள்ள மெஷின் மைன்டர் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

நேரில் சமுகம்தரவும்.

**தேவி அச்சகம்**
114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 2789
(70498)

---

# புலமைப்பரிசில் 2000

11-வது பரீட்சையில் அதி கூடிய புள்ளி பெற்றோர்

ச. ஷாமளை
யா. இ. ம. ஆ. பா.

சே. மதுரிகா
யா. இ. ம. ஆ. பா.

க. த்சாகன்
யா. பொஸ்கோ வித்.

ச. கிரிசாளினி
யா. பொஸ்கோ வித்.

பெ. கிருஸ்ணப்பிரியா
யா. சுண்டிக்குளி ம. கல்.

அடுத்த பரீட்சை 31-10-99 மு.ப. 8-00 — பி.ப. 3-00 மணி வரை நடைபெறும்.

**BOND**
யாழ். நகர்
(70461)

---

# ஓராண்டு நினைவில்



இம்மைக்கு 29 — 03 — 1921

மறுமைக்கு 10 — 11 — 1998

## அமரர் முருகேசு வேலுப்பிள்ளை

திதி: 31-10-1999

வையகத்தில் வந்தவர்கள்
வாழ்ந்து மடிவராவதிலே
பொய்யெதுவு மில்லையென்னும்
பெருத்தவுண்மை காட்டுதற்கோ
அய்யாவுன்னை யவனழைத்தான்
அகிலந் தாங்கும் மலர்ப்பாதம்
உய்யும் வழியை அவன் தரினும்
உனையிழந்து உருகுகின்றோம்.

மண்விட்டு நீர் சென்று விண்
தொட்டு நின்றிடுவீர்; நம்
கண்கொட்டும் நீரிங்கு மண்
தொட்டு ஆகிநிற்க மனம்
புண்பட்டு நாமிங்கு எண்
தொட்டு எண்ணியெண்ணி
ஆண்டொன்று ஆனதையா — இன்று
ஆண்டொன்று ஆனதையா,

அய்யாவின் ஆத்ம சாந்திக்காக வேண்டும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.

'அன்பகம்'
வளர்மதி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (70487)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி பராசலிங்கம் ஜெயகுமாரி

தோற்றம் 06 - 03 - 1967 மறைவு 01 - 10 - 1999

எம் குடும்பத்தின் குலவிளக்கே!
நல்வாழ்வு தருவாய் என்றிருக்க,
இறுதி யாத்திரை சென்றுவிட்ட தாயே!
அன்புக்கும் பண்பிற்கும் அறிவிற்கும் ஊற்றிடமே!
எம்மை மறந்து சென்றுவிட்ட ஜெயாவே!
உன் உயிர் அமைதி பெற
இறைஞ்சுகிறோம் இறைவனை.

அன்னாரின் திடீர் மறைவை அறிந்து எமது துயரில் பங்கு கொண்டு அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் நன்றி கூறுவதுடன் இன்று (31-10-1999) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புரிமை கொண்டு அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

172, மானிப்பாய் வீதி.
யாழ்ப்பாணம். (70422)

---

# பருத்தித்துறை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

கீழே விவரிக்கப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள வேலைகளை நிறைவேற்றுவதற்கான கேள்வி, வேலைகளைச் செய்வதற்கான தகுதியுடையவர்களிடமிருந்து 1999 - 11 - 04 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்பட்ட படிவங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பி. ப- 2.00 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீல்னைக்கு எடுக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பிப்பவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

அட்டவணையில் விவரிக்கப்பட்டவாறு மீளளிக்கக்கூடிய வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் 1999 - 11 - 03 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிவரை உரிப படிவங்கள் எம்மால் வழங்கப்படும்.

கேள்விகள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்டு தலைவர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி என்ற முகவரிக்கு குறித்த தினத்திற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவஞ்சலிலோ அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை உள்ளடக்கிய அஞ்சலுறையின் இடதுபக்க மேல் மூலையில் எக்கேள்விக்கான பத்திரம் எனக் குறிப்பிடல் வேண்டும்,

இது விடய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| கேள்வியின் பெயர் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் |
|---|---|---|
| 1. மாணான்டி சந்தைக்குழாய்க் கிணறு அமைத்தல் | 1500.00 | 100.00 |
| 2. வல்லிபுரம் குருக்கட்டுப் பகுதியில் பொது மலகூடம் அமைத்தல் | 750.00 | 100.00 |

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்,
ஜே. பி. யு. எம்.,
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.
26.10.1999

(இ/9564)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The 48th Annual Festival

of

**Carol Singing**

by

**THE YOUTH**

of the

**NORTH**

at

The Peto Memorial Hall
St. John's College, Jaffna

on

**Saturday 6th November 1999**
at 10.00 a.m.

ADMISSION BY PROGRAMME Rs. 10/-

[C/9545]

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## கதிரவேலு வீரசிங்கம்

அன்னையின் மடியில்
03 — 01 — 1944

ஆண்டவன் அடியில்
21 — 09 — 1999

கலையாத ஞானமும் கண்ணான மானமும்
நிலையாகக் கொண்டு குலையாமல் வாழ்ந்தீர்
நீரின்றி நாம் இங்கு சொரிகின்ற விழி நீரால்
நிஜமான எம் வாழ்வு நிழலாகிப் போயிற்று.

இன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மகள், உறவினர்கள்.

சாவற்கட்டு,
ஆனைக்கோட்டை.

(70506)

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
17 – 08 – 1935



அம்பாள் கையில்
29 – 10 – 1991

## அமரர் ஆறுமுகம் குகதாசன் (சிவம்)

**திதி: 30 - 10 - 1999**

பத்தமேனியைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் மிருசுவில் கண்ணகை அம்பாள் காலடியில் அமரத்துவம் அடைந்தவருமான ஆறுமுகம் குக தாசனை நினைவு கூருவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

அம்மா, சகோதரர்கள்.
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

பத்தமேனி,
அச்சுவேலி.

(70511)

# விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள்

யாழ்ப்பாணம், ஒக். 31

குடாநாட்டில் உள்ள ஆயிரத்து 200 விவசாயப் பயனாளிகளுக்கு சர்வதேச உணவு விவசாய நிறுவனத்தால் மரக்கறி விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்ட இந்தப் பயனாளிகளுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான போஞ்சி, கோவா, வெண்டி, கத்தரி, கறிமிளகாய் ஆகிய விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அடுத்த மாதம் இவர்களுக்கென மண்வெட்டி, வாளி, கத்தி ஆகிய உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் கே. குணரட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை —

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த 200 பயனாளிகளுக்கு தலா இரண்டு தென்னம் நாற்றுக்களும் அதற்கான பசளைகளும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [ஐ-10]

# இளைஞர் பயிற்சி முகாம்கள்

யாழ்ப்பாணம், ஒக். 31

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் யாழ். மாவட்டத்தில் மூன்று இடங்களில் இளைஞர் முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இந்த மூன்று இளைஞர் முகாம்களிலும் பிரதேச மட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இளைஞர் கழகங்களில் அங்கம் வகிக்கும் 150 இளைஞர், யுவதிகள் பங்குபற்றவுள்ளனர்.

நவம்பர் முதல் வாரத்திலிருந்து இந்த மூன்று முகாம்களும் நடத்தப்படவுள்ளதாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் ரி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

வலிகாமம், யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்தப்படவுள்ளன. [ஐ-5]

# அன்பளிப்பு

யாழ். போதனா வைத்திய சாலையின் பாவனைக்கென ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பு லான்ட் மாஸ்டர் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (இ-15)

# நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தீபாவளி வாழ்த்து மடல்கள் வந்துவிட்டன

பலவித அளவுகளில்—விலைகளில் புதிய திரைப் படங்களுடன் கூடிய தீபாவளி வாழ்த்துமடல்கள் மற்றும் பக்திப் படங்களுடன் கூடிய தீபாவளி வாழ்த்து மடல்கள் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்கு வந்துவிட்டன.

"வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு."

## மக்மிலன் புத்தகசாலை

இல. 3 பஸ்நிலையம் (அருகில்)
யாழ்ப்பாணம்.
T. P. 2422

(சி/9556)

# வாழ்த்துப்பா

மேன்மை தங்கிய ஆயர்

## தியோகுப்பிள்ளை ஆண்டகை

அவர்களுக்கு:

பண்பால் பரிணமித்து பாசத்தால் பக்குவமடைந்து, பரமன்பால் பணிசெய்து. பாமர மக்களின் நெஞ்சத்துள் உயர்ந்தவரே: வாழ்க! வாழ்கவே!!

கல்வி குன்றிய மக்களை கருவிலிருந்து உயர்த்த களம் தன்னை அமைத்தவரே: வாழ்க! வாழ்கவே!!

ஆன்மீகத் தலைவராய் (ஆயர்) ஐந்து ஆண்டுகள் அயாது ஆட்சி புரிந்து ஆகமம் தன்னை ஆய்வுடன் தந்தவரே: வாழ்க! வாழ்கவே!!

நாட்டார் நாடகங்களை நயமுடன் நாடறியச்செய்தவரே: "நாட்டுக்கூத்தின் நற்காவலன்" என்று கலையுலகின் சிற்பிகளாம் கலாமன்றத்தினரால் மகுடம் சூட்டப்பட்டவரே: வாழ்க! வாழ்கவே!!

பணிவாழ்வின் சிறப்புக்களை சிந்தனையில் பதியவைத்த யாழ். பல்கலைக்கழகத்தால் மெய்யியல் கலாநிதிப் பட்டத்தை பார்புகழப் பெற்றவரே: வாழ்க! வாழ்கவே!!

கரம்பொன் தந்த பொற்கரமே! யாழ். மண் சுவீகரித்த சுடர் விளக்கே! நின்புகழ்பாடி வாழ்த்துக்கூறும் பல்லாயிரத்து பல்லின மக்களுள் ஒரு சிறுதுநம்பாக புனித வின்சென் டிபோல் சபையின் சூசையப்பர் பந்தியைச் சார்ந்த நாம் தங்களுக்கு நல்வாழ்த்துக்கூறி தங்களது புகழ் புடமிட்ட தங்கம் போல் என்றுமே மிளிர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

தகுதி கண்டு கௌரவிக்கும்
யாழ். பலகலைக்கழகம்
தகுதி கொண்ட எமது ஆயரை
கௌரவித்தமைக்கு எமது நன்றிகள்.

புனித சூசையப்பர்பந்தி உறுப்பினர்,
புனித வின்சென் டிபோல் சபை,
ஆசனக்கோயில், யாழ்ப்பாணம்.

(70505)

# யா/ சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் - வேலணை

## பொன்விழா பரிசுத்தினம் - 1999

**காலம்:** 01-11-1999 திங்கட்கிழமை
**நேரம்:** காலை 9.30 மணி (புதிய நேரம்)
**இடம்:** கல்லூரி மண்டபம்

தலைவர்:
திரு. கு. கணேசலிங்கம் அவர்கள் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் செ. பாலச்சந்திரன் அவர்கள்
(கலைப் பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:
திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், தீவக வலயம்)

பரிசில் வழங்கல்:
திருமதி சத்தியலெட்சுமி பாலச்சந்திரன் அவர்கள்

இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(70518)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sony 2000W Vedio, Odeo CD டெக்செற் இரண்டும் 120A பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 27, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (70508)

மானிப்பாய் வீதி, உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் 3½ பரப்புக் காணியில் தனிக் கிணற்றுடன் நான்கு அறைகள் கொண்ட நல்லவீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr. P. இராமநாதன் தாவடிச் சந்தி, கொக்குவில். (70485)

நல்ல நிலையில் உள்ள Sony 2092 T.V விற்பனைக்கு உண்டு. மாலை 2 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். 76/6 ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (70475)

நிறைகூடிய புறோயிலர் இறைச்சிக்கோழிகள், இந்திய இன முருங்கைக் கன்றுகள், கினிக் கோழிக் குஞ்சுகள், விறாத்துக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. எந்த நேரமும் தொடர்புகொள்ளலாம். 40/6, புகையிரத கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம். (செல்வ நாகபூஷணி அம்மன் கோயில் அருகில்) (70514)

3¼' உயர திண்டுக்கல் இரும்புப் பெட்டி (அயன்சேவ்) 311, K.K.S வீதி கடையிலும் 2¼' உயர திண்டுக்கல் இரும்புப் பெட்டி (அயன்சேவ்) 92, 4 ஆம் குறுக்குத் தெருவிலும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ்.கே. பிள்ளை, 92, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம்: காலை 9 — 4 மணிவரை. (70451)

தூய இன கறுப்பு ஆண் டோபர்மன் நாய்க்குட்டி மற்றும் இரண்டுசோடி வெள்ளை நிற Finchers குருவிகள் விற்பனைக்கு உண்டு. இல. 169, ஆடியபாதம் வீதி, (மருத்துவ பீட வீதி), திருநெல்வேலி. (70532)

ஐஸ்கிறீம் தயாரிக்கும் மெஷின் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் கோப்பி வறுக்கும் இயந்திரமும் (றோஸ்ரர்) கோப்பி அரைக்கும் இயந்திரமும், றெலிபோன் கூடும், மரத்தில் செய்த சோக்கேஸ் என்பனவும் உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: றிக்கோ பத்மநாதன் 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (70442)

சகல வசதிகளுடன் கூடிய பெரிய மாடி வீடு (படுக்கை அறை குளிரூட்டி பொருத்தப்பட்டது) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றிக்கோ பத்மநாதன் 22/3A, விதானை வீதி, சுண்டுக்குளி. (70443)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை தென்மேற்கு பிரப்பங்குளம் வீதி, இலக்கம் 145/3 இல் அமைந்துள்ள கட்டடம கட்டிக் குறைநிலையில் உள்ள வீடும், நிலப்பரப்பு ஒன்றும் குளி 2. 7 கொண்ட காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. கனகரட்ணம் இல. 25/14 ஒடை ஒழுங்கை, வண்ணார் பண்ணை தென்மேற்கு, யாழ்ப்பாணம் அல்லது 446, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (70502)

## வாடகைக்கு

யாழ், வண்ணை சிவன் கோயில் அருகில் அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் அல்லது நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (70441)

## தவறிவிட்டது

08-05-1984 இல் பிறந்த கல்லந்தாழ்வு காரைநகரைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சுதாமதி என்பவருடைய கடற்படை விஷேட அடையாள அட்டை பொன்னாலைச் சந்திக்கும் காரைநகர் ஆலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிராமசேவையாளர் அல்லது காரைநகர் சிவன்கோயில் வீதியிலுள்ள ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையத்தில் ஒப்படைக்கவும். (70510)

விமலதாஸ் சாள்ஸ் விவியன் 38, பழைய இராணுவ முகாம், கொய்யாத்தோட்டம் என்ற முகவரியிட்ட எனது விசேட அடையாள அட்டை (0901000841) 28-10-99 இல் கோயில் வீதிக்கும் றக்காவீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 716 மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (70507)

வீரபத்திரர் வீதி, நுணாவில் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆறுமுகம் தேசிய அடையாள அட்டை இல. 343171781 V, வி. அ. அ. இ. 091048848. இதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் அழகம்மா தே. அ. அ. இல. 375221705 X, வி. அ. அ. இல. 091048847 இத்துடன் நிவாரண முத்திரை, உணவு பங்கீட்டு அட்டை என்பவற்றுடன் சேர்ந்த ஒரு கைப்பை (Bag) நுணாவிலில் வைத்து C.T.B பஸ்ஸில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கருணை கொண்டு தயவு செய்து நுணாவில் ராசா கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி/9573)

கணேசலிங்கம் யதுநந்தன் ஆகிய எனது விசேட, பாடசாலை அடையாள அட்டைகள் (0902011352) யாழ். இந்துக்கல்லூரிக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், தயவு செய்து இல. 70, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (70528)

93 புதிய வீட்டுத் திட்டம், குருநகரைச் சேர்ந்த ஜெயசீலன் றொபின்சன் என்பவரது விசேட அடையாள அட்டை [0901028859] மங்குமண்கும்பான் அடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 33, புதிய வீடமைப்புத் திட்டம், ஜெயசீலன் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (70533)

செல்லத்துரை சத்திய குமார் என்பவரது விசேட அ. அட்டை (0903015496) 28 - 10 - 99 அன்று கல்வியங்காட்டுச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புதிய செம்மணி வீதி, அனந்தபுரம், இருபாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (70522)

சுந்தரமூர்த்தி பாலசுப்பிரமணியம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 492710237V யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 73, காரைக்காட்டுலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (70525)

## ஆடு விற்பனைக்கு

ஜமுனா பாறி பால் ஆடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 28, பேரின்பநாயகம் வீதி. (கச்சேரிக்கு பின்புறம்) [70...]

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் தீபாவளியை முன்னிட்டு கிலோ 100 ரூபாவுக்கு சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) 31, மான் பாடசாலை வீதி, உடுவில். (70338)

இறைச்சிக்கோழி [Broiler] விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக் கடை அருகில்) (70331)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தட்டுப்பாடின்றி தினமும்காலை 7மணி தொடக்கம். (பாதிக்கோழி உட்பட) சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. அத்துடன் அடைமுட்டையும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (70523)

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 37/2 கச்சேரி நல்லூர் வீதி, (Blue Ribon Hotel அருகில்) யாழ்ப்பாணம் குறிப்பு: பண்டிகை தினம் வருவதால் இன்று தொடக்கம் வாடிக்கையாளருக்கு விலைகுறைப்பு செய்துள்ளோம். [70486]

## மணமகள் தேவை

எம்மிடம் வெளிநாட்டு மணமகன் உண்டு. பாவம் குறைந்த மணமகள் (67ஆம் ஆண்டுக்குப் பின்) தேவை. குறிப்பு படத்துடன் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்கள் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ முருகன் சோதிடர் நல்லூர் வடக்கு. (70464)

எம்மிடம் வெளிநாட்டு மணமகன் லண்டன் எஞ்சினியர் (70, 71 ஆம் ஆண்டு. உண்டு. பாவம் குறைவு) குறிப்பு, படத்துடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீமுருகன் சோதிடர், நல்லூர் வடக்கு. (70463)

## கை மாறிவிட்டது

26-10-1999 அன்று யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கி முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெண்களுக்கான லுமாலா சைக்கிள் தவறுதலாக மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மேற்படி சைக்கிளை கைமாறி எடுத்தவர் திருமதி வி. சிவபாதம், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை என்ற முகவரியில் ஒப்படைத்து தமது சைக்கிளை எடுத்துச் செல்லுமாறு கேட்கின்றோம். [70454]

## சித்தி விநாயகர் சோதிடம்

சாதகம் எழுத, தீர்க்கமான பலன் அறிய, விவாக தாமதம்—கிரகதோஷத்திற்கு சரியான பரிகாரம் காண, சகல விதமான யந்திரங்களுக்கும் நாடுங்கள்: கொழும்பில் 22 வருட அனுபவம் வாய்ந்த சோதிடர் விஸ்வப்பிரம்மஸ்ரீ மா. தங்கவேல், 9, டச்சுவீதி, சாவகச்சேரி. (70432)

## மோட்டார் சைக்கிள் விற்பனை

கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட Brand New Hero Honda CD 100 SS (Maroon Colour) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உள்ளன. 73, கொழும்புத் துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் (நாகம்மாள் ஞானவைரவர் கோயில் அருகில்) (70...)

## மணமகன் தேவை

பிரான்சில் (France) நிரந்தர விசாவுடன் வேலை செய்யும் A/L படித்த அழகான 24 வயதுடைய கிறிஸ்தவப் பெண்ணுக்கு பெற்றோர் வரன் தேடுகின்றனர். வெளிநாடு விரும்பத்தக்கது. விள. இ. 965 மே/பா உதயன். (70527)

இந்து கௌரவ குடும்பம் 1969 இல் பிறந்த 7 இல் செவ்வாய் பூரட்டாதி நட்சத்திரம் உடைய B. Sc ஆசிரியைக்கு அரச தொழில் அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை. விளம்பர இல. 962, மே/பா உதயன். (70490)

## கலர் மீன்கள்

பல இன கலர் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உண்டு. தினமும் பிற்பகல் 4 மணிக்குப் பின் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: அரசரெத்தினம், 215, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (O. L.R தேவாலயத்திற்கு அருகில்) (70491)

## வீடு விற்பனைக்கு

கொடிகாமம்பருத்தித்துறை வீதியில் சகல பயன்தரும் மரங்கள் உள்ள 20 பரப்புக் காணியும் அதனுடன் அமைந்த கல்வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: யாழ். மெடிக்கல் சென்ரர். இல. 166, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி/9604)

## தரம் 1,6-க்கான அனுமதி

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
போட்டிப் பரீட்சை மூலம் தரம் 6 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்ப முடிவு திகதி:- 22 - 11 - 1999

அதிபர்
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை.

(70473)

## WANTED

Logistics/Administrative Support For the Demining Operation in Jaffna.

**Qualifications:** Fluent in English and Computer Literacy

**Experience:-**

- Minimum one year pertaining to the post
- Preparation of budgets
- Maintenance of Accounts
- Procurement of goods
- Preparation of reports

**Please send in your curriculum vitae to reach the office on or before the 2nd, Tuesday November.**

C/o UNOPS/JRRP
125, Temple Road, Jaffna.

(70465)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **வேலுப்பிள்ளை தருமரத்தினம்**
[இளைப்பாறிய நகரசபை ஊழியர், சாவகச்சேரி]

மண்ணகத்தில் 02-06-1932 — விண்ணகத்தில் 02-10-1999

விகடமாகப்பேசி மண்ணகத்தோரை மகிழ வைத்த நீங்கள் — விண்ணகத்தோரை மகிழ வைக்க அவ்வகம் சென்றீரோ?

தங்களின் ஆத்மா இறையடி இணையப்பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், அயலவர்கள்.

பெருங்குளம் சந்தியடி,
சாவகச்சேரி.

(சி/9603)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இயற்கை நேசம் கொள்வோம்!

மழை காலம் வந்துவிட்டது. வீடுகளிலும் வளவுகளிலும் பயன்தரு மரங்களை நடுவதற்குத் திட்டமிட வேண்டிய, ஆயத்தம் செய்ய வேண்டிய காலம் இது. கடும் மழை பெய்து ஓய்ந்து வெள்ளம் வடிந்தவுடன் மரங்களை நடுகை செய்தால் அவை உரியவாறு வளர்ந்து பயன் தரும்.

யாழ்ப்பாணம் வரண்ட பூமியாக இருந்த போதிலும் வன வளம் குன்றிய பிரதேசமாக இருந்த போதிலும் மரம் வளர்த்து வளம் சேர்ப்பதில் எங்கள் மூன்னோர்கள் பெரிதும் அக்கறை செலுத்தினார்கள்.

நீர் இறைக்கும் இயந்திரமும் மின்சாரமும் இல்லாத காலத்தில், பனை ஓலைப் பட்டை கொண்டும் துலா மிதித்தும் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதோடு பயன்தரு, நிழல் தரு மரங்களை நட்டும் வளர்த்தனர். வெற்று நிலங்களில் பனை விதைகளை மழை காலங்களில் நட்டுப் பனங்காணிகளை உருவாக்கினர். தென்னைகளை நட்டு வளம் சேர்த்தனர்.

குடாநாட்டில் இன்று ஓரளவேனும் பசுமையைக் காணக் கூடியதாக இருக்கிறதெனில், முந்திய சந்ததியினரின் கடும் உழைப்பும் திட்டமிட்டுச் செயற்பட்ட திறனுமே காரணங்கள். அவர்கள் விட்டுச் சென்ற மர வளத்தில் பெரும் பகுதி அழிக்கப்பட்டு விட்டது. மேலும் அழித்துக் கொண்டே இருக்கிறோம்.

அழிந்தவற்றை ஈடு செய்வதோடு நில்லாது, புதிதாகவும் மேலதிகமாகவும் மரங்களை நட்டால் தான் எங்கள் எதிர்காலச் சந்ததியினர் இங்கு வாழமுடியும். அவர்களுக்கு நாம் அளிக்கக் கூடிய அரிய முதுசொம் மரவளமாகவே இருக்க வேண்டும். அதுவே வேறு எதனையும் விட அவர்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் கைகொடுக்கும், உறுதுணையாக அமையும்.

எங்கள் மண்ணில் இலகுவாக வளர்ந்து ஆயிரம் வகைப் பயன்களைத் தருவது பனை. அதனைப் பயிரிட்டு இயற்கையையும் பேணிப் பொருளாதாரத்தையும் வளர்க்கும் அரிய வாய்ப்பு இருந்தபோதிலும் எம்மவர் அதில் உரியவாறு அக்கறை காட்டாதிருப்பது கவலைக்குரியது.

பனையைக் குடாநாட்டின் பெருந்தோட்டப் பயிராகச் செய்கை செய்தால் மரவளமும் பெருகும்; பொருளாதாரமும் சிறக்கும். எங்கள் மண்ணோடு இணைந்த செல்வமாக விளங்கும் பனையை வளர்க்க ஆர்வம் இல்லையெனில் எதிர்காலத்தில் நாம் அக்கறை இல்லாதவர்கள் என்பதே அர்த்தம்.

எங்கள் பிரதேச வளர்ச்சியிலும் எதிர்காலத்திலும் அக்கறை உடையவர்களாக எல்லோரும் மாற வேண்டும். பனை வளர்ப்பில் இந்த சதாப்தத்தில் முன்னோடியாக விளங்கிய ''மில்க்வைற்'' கனகராசா ஐயாவை முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

எந்த நேசனாக இல்லாவிடினும் நாம் இயற்கை நேசனாகவும் இறை நேசனாகவும் வாழப் பழகுவோமாக. இதே பக்கத்தில் பிரசுரமாகியுள்ள அளவெட்டிச் சிறுவன் நந்தபாலனின் இயற்கை நேசத்தையும் மரவளம் பெருக்கும் ஆர்வத்தையும் எல்லோரும் கைக்கொண்டால், எமது எதிர்காலச் சந்ததிக்கு அருங்கொடையை விட்டுச் செல்லலாம்.

இந்தச் சிறுவனின் உணர்வு இன்றைய இளம் சந்ததிக்கு பரவுமாயின் இந்த மண்ணின், மக்களின் வாழ்வும் வளமும் எக்காலமும் சிறப்பதற்கு எவ்வித தடையும் இருக்காது என்பது நிச்சயம்.

# பயன்தரு மரங்களை நட்டு பிறந்தநாள் கொண்டாட்டம்!

## அளவெட்டிச் சிறுவனின் முன்மாதிரி

வலிகாமம் தெற்கு, ஒக். 31

வருடந்தோறும் வரும்பிறந்த நாள்களைஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாகக்கொண்டாடி மகிழ்வதுண்டு. பிறந்த நாள் என்றால்கேக் வெட்டி இனிப்புப் பண்டங்களைப் பரிமாறிக் கொண்டாடுவதே வழக்கம். அது ஒரு கலாசாரமாகவும் மாறி நிலைத்து விட்டது. இந்த மேற்குலகக் கலாசாரத்தின் பிடியில் அனைவரும் சிக்குண்டிருக்க தனது பிறந்த நாளை புதுமாதிரியாக — முன்மாதிரியாகக் கொண்டாடுவோரும் — கொண்டாட வேண்டும் என்ற எண்ணமுள்ளோரும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றனர்.

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த சிவநாயகம் நந்தபாலன் என்ற சிறுவன் தனது பிறந்த தினத்தை முன்மாதிரியாகக் கொண்டாடிக் காட்டியுள்ளார்.

அவர் தனது பிறந்த தினத்தன்று நண்பர்கள், ஊரவர்களை அழைத்து அவர்கள் முன்னிலையில் தனது வீட்டு வளவில் பயன் தரும் மரங்களை நட்டு பிறந்த நாள் கொண்டாடி உள்ளார்.

தேக்கு, சமண்டலை போன்ற பயன்தரும் மரங்களை தனதுபிறந்த நாள் நினைவாக அவர் நட்டார்.

கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் வங்கி ஊழியர்கள் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகள் பலரும் இந்தப் புதுமையான பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறுவனின் முன்மாதிரியைப் பாராட்டினர்.

(ஐ-152)

# பாஸ்கரன் மறைவுக்கு கூட்டணி அனுதாபம்

யாழ்ப்பாணம், ஒக். 31

வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் தமிழ்மக்களுக்கு குறிப்பாக காங்கேசன்துறைத் தொகுதி மக்களுக்கு ஆற்றிய அரும் பெரும் சேவைகளை இலகுவாக மறந்து விடமுடியாது.

சு. ஸ்ரீபாஸ்கரனின் மறைவு தொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணியின்சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி லண்டனில் இருந்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது —

ஸ்ரீ பாஸ்கரன் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். உடல்நிலை குன்றிய நிலையிலும் தம் பணிகளைத் திறமையுடன் நிறைவேற்றிய அமரர் அரசின் காணி சுவீகரிப்பையும் முறியடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். மகாஜனாக் கல்லூரி மீண்டும் சொந்தக் கட்டடத்தில் இயங்க அரும்பாடு பட்டு வெற்றியும் கண்டார்.

அன்னாரின் திடீர் மரணம் அவர்தம் பாரியார், உறவினர்களுக்கு மட்டுமன்றி தமிழ் இனத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பேரிழப்பாகும் — என்றுள்ளது.

(க)

## பெயர்ப்பட்டியல் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள் மற்றும் யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்த தொண்டர் ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் ஒவ்வொரு கல்வி வலயங்களுக்கும் வந்து சேர்ந்துள்ளதாக யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பட்டியலில் உள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறும் என்றும்—

இந்தப் பெயர்ப்பட்டியலை யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் பார்வை இடலாம் என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார். (க)

## சாரணர் வதிவிடப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மத்திய கல்லூரியின் முதலாவது சாரணர் குழுவின் வதிவிடப் பயிற்சிப் பாசறை கடந்த 29ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

மூன்று நாள்கள் நடைபெறும் இந்தப் பாசறையை உதவி மாவட்ட ஆணையாளர் ஜி. செபஸ்ரியாம் பிள்ளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கோ. சி. வேலாயுதம் கலந்து கொள்வார். [க]

## விற்பனை நிலையம் அமைப்பு

யாழ். நகரில் கே. கே. எஸ். வீதியில் அமைந்திருக்கும் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் வர்த்தக நிலையப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விற்பனையகம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர்கள் இந்த நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் நிழற்பிரதி எடுக்கும் சேவையும் இந்த நிலையத்தில் உள்ளது.

(ஐ-17)

## நாளை

ஐப்பசி 15

திங்கட்கிழமை

திதி: அட்டமி

முற்பகல் 10.10 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம்

பின்னிரவு 3.12 வரை

ஜயநேரம்: 12.03—1.33

ராகுகாலம்: 7.33—9.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உட்பகையைவிட வெளிப்படையாகக்கடிந்து கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவைதீவு சிகிச்சை முகாமில் 377 பேருக்குப் பரிசோதனை

நெடுந்தீவு, ஒக். 31

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊர்காவற்றுறைப் பிரிவு கடந்த வாரம் எழுவைதீவில் மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தியது.

இந்த இலவச மருத்துவ பரிசோதனைகளில் பொது நோயாளர்களும் பாடசாலை மாணவர்களுமாக 377 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பரிசோதனையின் பின் மாணவர்கள் 18பேரும்பொதுநோயாளர்கள்39பேரும் மேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர். கண்பரிசோதனையில் கலந்து கொண்ட நோயாளிகள் 86 பேரில் 14 பேருக்கு விழித்திரை அகற்றப்படவேண்டும் எனக் கூறப்பட்டது. 22 பேர்களுக்குக் கண்பரிசோதனையின்பின் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற சிகிச்சை முகாமிற்கு வேண்டிய உதவிகளை எழுவைதீவு பங்குத்தந்தை அருட்திரு. யேசுதாசனின் உதவியுடன் எழுவைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வழங்கியது.

வைத்திய அதிகாரி வை. தியாகராசா தலைமையில் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் செல்வி நிரஞ்சனா, திருமதி கிருஷ்ணவேணி ஆகியோருடன் வைத்திய மாணவர்கள் உட்பட 40 பேர்கள்வரை கலந்துகொண்டனர்.

எழுவைதீவு மருத்துவ முகாமில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துவகைகளும் மற்றும் போஷாக்கு உணவு, லைவ்போய் சவர்க்காரம் என்பனவும் இலவசமாக வழங்கப்பட்டன.

மருத்துவ வசதிகளற்ற எழுவைதீவில் மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சைகளை மேற்கொண்டதுடன் போஷாக்கு உணவுகளை வழங்கியதற்காகவும் அருட்திரு யேசுதாசன் அடிகள் ஊர்காவற்றுறை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

(ஐ-111)

# அச்சுவேலி பஸ் நிலையத்தில் பயணிகள் தங்க மண்டபம்

வலி. கிழக்கு, ஒக். 31

அச்சுவேலி, பஸ் நிலையத்திற்கு அண்மையில் பயணிகளின் போக்குவரத்து நன்மைகருதி 6 லட்சம் ரூபா செலவில் பயணிகள் தங்குமிடம் ஒன்று சகல வசதிகளுடனும் நிறுவப்பட உள்ளது

வலி. கிழக்கு பிரதேச சபை இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது.

மாகாண சபையின் விசேட நிதி மூலம் 6 லட்சரூபா செலவில் பல அறைகள் கொண்ட சகல வசதிகளுடனான கட்டடமாக இது அமையவுள்ளதாக பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[ஐ-180]

# அரசின் போக்கு குறித்து வினவ மக்களுக்கு உரிமை உண்டு

## நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 31

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்த விடயத்தில் அரசாங்கத்தின் அசமந்தப் போக்குத் குறித்து கேள்வி எழுப்புவதற்கு மக்களுக்கு உரிமை உள்ளது என இலங்கைத்தொழிலாளர்காங்கிரசின் கொழும்பு மாவட்ட உறுப்பினர் பி.பி. தேவராஜ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்:

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நான்கு வருடங்களுக்கு முன்னர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இனப்பிரச்சினைத் தீர்விற்கு அவசியம் எனத் தெரிவித்தார்.

ஆனால் இன்று மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்திற்கு பதில் வேறு ஓர் அணுகுமுறையைப் பயன்படுத்துவது குறித்துப்பேசி வருகிறார்.

ஜனாதிபதியும் கூட இனப்பிரச்சினை குறித்த விவகாரத்தில் இழுத்தடிக்கும் போக்கையே கடைப்பிடித்து வருகிறார்.

இவ்வாறான முரண்பட்ட பேச்சுக்களினால் அரசாங்கம் நாட்டில் உள்ள அரசியல் சக்திகளுக்கு தவறான சமிக்ஞையே வழங்கி வருகிறது.

இந்த விடயத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் தீவிர போக்கு விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தவே செய்யும்.

இந்தப் பிரச்சினை காரணமாக தினமும் பெரும் எண்ணிக்கையான உயிர்கள் வீணாகப்பலியாகிக் கொண்டிருக்கின்றன.

பாதை தெளிவாக இருக்கும் போது ஏன் நியாயமான ஒரு போக்கைக்கடைப்பிடிக்காமல் தவறான அணுகுமுறையை பின்பற்றுகிறார்கள்? என அவர் தனது உரையில் கேள்வி எழுப்பினார்.

[ம]

# அச்சுவேலிப் பகுதியில் வயிற்றோட்டம் பரவுகிறது

அச்சுவேலிப் பகுதியில்வயிற்றோட்டநோய் பரவி வருவது ஆஸ்பத்திரி புள்ளி விவரம் மூலம் தெரிய வந்துள்ளது.

அச்சுவேலி ஆஸ்பத்திரியில் நாளாந்தம் வெளிநோயாளர் பிரிவில் 75-க்கும் மேற்பட்ட வயிற்றோட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களில் அதிகமானோர் சிறு குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, தம்பாலை, பத்தமேனி ஆகிய இடங்களில் இருந்தே பலரும் வயிற்றோட்ட நோய்க்கு சிகிச்சை பெற வருகின்றனர்.

பொதுமக்கள் சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளாமையே இந்நோய் பரவக் காரணம் என்று சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பாக மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் கிணறுகளுக்கு குளோரின் இடல், சுட வைத்து ஆறிய நீரைப் பருகுதல் போன்ற சுகாதார நடைமுறைகளைக் கைக்கொள்ளுதல் மூலம் இந்நோய்த் தாக்கத்தினைக் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-180)

# தீபாவளிக் கொண்டாட்டம்

# இம் முறை பாடசாலைகளிலும்

வலிகாமம்.தெற்கு, ஒக்.31

இந்த நாட்டின் சகல இன, மதத்தவர்களாலும் கொண்டாடப்படும்விழாக்களைபாடசாலை மட்டத்திலும் ஒழுங்கு செய்து நடத்தி தேசிய ஐக்கியத்தை வளர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு வடக்கு—கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெற உள்ள தீபாவளி தினத்தை பாடசாலைகளில் 8 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாட பாடசாலைகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

தீபாவளித்தினத்தைப் போன்று கிறிஸ்மஸ்தினம், றம்ழான் தினம், தமிழ்—சிங்களவருடப்பிறப்பு, வெசாக்தினம் போன்ற தினங்களும் எதிர் காலத்தில் பாடசாலை ரீதியாக கொண்டாடப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உடுவில் கல்விக் கோட்டத்தில் உள்ள 29 பாடசாலைகளும் ஆறு அணிகளாக்கப்பட்டு தனித் தனியே நிகழ்ச்சிகளை நடத்தி நவம்பர் 10 ஆம் திகதிக்கு முன் அது பற்றிய அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பாரனந்தன் பணிப்புரை விடுத்துள்ளார்.

கிராமிய நடனம், குழு நடனம், தீபநடனம் இசை நிகழ்ச்சிகள், கும்மி, கோலாட்டம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இதன் போது இடம்பெறவுள்ளன. (ஐ-152)

## சான்றிதழ் வழங்குவது ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் பிற்போடப்பட்டுள்ளது என்றும்—

மேற்படி வைபவம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும்—

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார், [க]

## புதிய சேமிப்புக் கணக்கு

யாழ்ப்பாணம், ஒக். 31

உலக சிக்கன தினம் இன்றாகும். இத்தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கி 'இத்துரு மித்துரு' எனும் புதிய சேமிப்புக் கணக்கினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தக் கணக்கினை 16 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டோர் ஆரம்பிக்க முடியும்.

இந்தப் புதிய சேமிப்புக் கணக்கில் பொதுமக்கள் வைப்புச் செய்யும் முகமாக இன்று காலை 8 மணிக்கு சகல தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளும் திறந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## விநியோகம்

சங்கானை பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த ஆயிரம் பயனாளிகளுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் பழமரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

சங்கானை, சுழிபுரம், சித்தன்கேணி, வட்டுக்கோட்டை அராலி ஆகிய இடங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கே மா, பலா, மாதுளை போன்ற பழமரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-10)

## நாளைய சமுதாயம்..,

(3 ஆம் பக்கத் தொடர்)

நோக்கிப் புறப்பட வைத்தல் வேண்டும். ஏனெனில் இன்றைய அரும்புகளே நாளைய விழுதுகள்.

''பிறர் செய்வதில் எது உனக்கே பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே'' என்று சீனாவின் தத்துவஞானியான கன்பீஷியஸ் கூறியுள்ளார். இன்று எம் மத்தியில் இவ்வாறான சகிப்புத் தன்மை நிலவுமேயாயின் நாளை இந்த நாட்டில் சமாதானம் நிரந்தரமாகக் குடியமர்ந்துவிடும். சமாதானத்தின் மூலம் இந்நாட்டிலே அமைதி நிலவும், 'வரப்புயர நீர் உயரும் ...'' என்ற ஔவையாரின் பாடல் போன்றே இந்நாட்டில் அமைதி நிலவுமேயாயின் சமூக, பொருளாதார முறைகள் திறம்பட நடைபெறும். எமது அறிவானது நன்கு பட்டை தீட்டப்படும். இவ்வாறான சமாதானத்தைப் பெற யாருக்குத்தான் ஆசை இல்லை? எனவே இன்றிலிருந்து சமாதானத்தை நோக்கிப் புறப்படுவோம்.

''ஆக்ரோஷமும், அவாவும் பேதமும்கொண்ட மனிதராக நாம் வாழும்வரை உலகில் சமாதானம் தோன்றாது'' எனக் கூறியவர் ஜே.கிருஷ்ணமூர்த்தி. ஆம்! இவ்வாறான குணங்கள் எம்மிடம் இருக்குமேயாயின் எம்மிடம் சமாதானம் இருக்காது. இவ்வாறான தீய குணங்களை எம்மிடமிருந்து அற்றுப் போகச் செய்து நற்குணங்களை எம்மத்தியில் வளர்ப்போம். இவ்வித குணங்களை வளர்ப்பதன் மூலமே நாம் சமாதானத்தை நோக்கி புறப்படுவதற்கு தகுதி ஆகின்றோம்.

சமாதானம் என்னும் நற்பண்பு நம் நாட்டில் வியாபித்துக் காணப்படுமானால் இத் தீமைகள் எமக்கு நிகழ்ந்திருக்குமா? ஆகவே இன்றிலிருந்து சமாதானத்தை நாம் முன்னெடுத்துச் செல்வோம். இற்றை நாள்வரை குடத்துள் விளக்காக இருந்த சமாதானத்தை குன்றில் இட்டதீபமாக ஆக்குவோம். இன்றிலிருந்து போர்க் கொடியைத் தாழ்த்தி சமாதானக் கொடியை உயர்த்துங்கள். இனிவரும் சமுதாயத்திலாவது சமாதானம் எங்கள் கைகளில் தவழ வேண்டும். வாருங்கள் மக்களே! சமாதானத்தை நோக்கிப் புறப்படுவோம்.


இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**விண்ணப்பப்படிவம்**

தொழில் நுட்பத் துறைக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். பிரர்ந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அடிப்படைத் தகைமை

| | | |
|---|---|---|
| டிப்ளோமா கற்கைநெறி | — | A/L சித்தி |
| ஆரம்ப கற்கைநெறி | — | O/L சித்தி |

ச. ஆ. ஞானேந்திரன்

OPEN UNIVERSITY OF SRI LANKA
REGIONAL CENTRE, JAFFNA.

(70542)



மிகவிரைவில் ஆரம்பம்!

**வர்த்தக வகுப்புகள்**

**DAY CLASSES**

(யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்)

**BEACON**

(வெலிங்டன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

(70537)



**கணேஷ் ஆட்ஸ்**

**அக்கடமி**

(நல்லூர் கோயில் முன்பாக)

**மனைப்பொருளியல் வகுப்புக்கள் ஆரம்பம்**

காலம்: 1 – 11 – 99 மாலை 4.00 மணி [புதிய நேரம்]

ஐசிங்
பூவேலை
கைவேலை ] S. சுமதி

தலையலங்காரம்
உணவுதயாரித்தல் } B நிஷாந்தி

துணி அலங்கரிப்பு ஓவியம்: M. கணேஷ்
(Fabric Painting)

4 பாடங்களுக்கு மேல் பயிலுவோருக்கு துணி அலங்கரிப்பு ஓவியக் கலை இலவசமாகக் கற்பிக்கப்படும்.

சான்றிதழ் வழங்கப்படும்.

வயலின், ஓகன், மிருதங்கம், வீணை, நடனம், சங்கீதம், ஓவியம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான அனுமதியும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நிர்வாகி

[70526]


## தவறவிட்ட சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். நீதிமன்றப் பகுதியில் அநாதரவான நிலையில் பொலீஸாரினால் மீட்கப்பட்ட மூன்று சைக்கிள்கள் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் அதற்குரிய பற்றுச் சீட்டினைக் காட்டி சைக்கிள்களை எடுத்துச் செல்லுமாறு பொலீஸார் தெரிவித்துள்ளனர். அவற்றின் இலக்கங்கள் வருமாறு:-

லுமாலா பெண்கள் —55609214.

லுமாலா ஆண்கள் —55579034.

லுமாலா ஆண்கள்- —2043575.

(ஐ 10)

# மரண அறிவித்தல்கள்

## அப்பையா குலசேகரம்பிள்ளை

(குலம்)

[புங்குடுதீவு]

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அப்பையா குலசேகரம்பிள்ளை வவுனியாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான அப்பையா முத்தம்மாவின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான நாகநாதர் செங்கமலத்தின் மருமகனும், கோகிலராணி மனோன்மணி [நோர்வே], ஜெயராணி [வவுனியா], அருள்தாஸ் [கனடா], ஜெயதாஸ் [கனடா], குகதாஸ் [வவுனியா], வனீசியா [நோர்வே] ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவரத்தினம், மகேஸ்வரி காலஞ்சென்ற வடிவேலு மற்றும் நாகேஸ்வரன் இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், யோகம்மா கமலாசினி, நாகேஸ்வரன், காலஞ்சென்றவர்களான சந்திரமதி, கோணேஸ்வரன், ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனனும், இளங்கீரன், கேதீஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், யுதர்சா, லக்சாஜினி, அஜந்தன், தர்சிகா, லக்சிதா, டெனிசியா, கஜீபன், கபில்வேந்தன், கஸ்தூரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை வவுனியாவில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தே. இளங்கீரன்

149, கோவில் வீதி,
நல்லூர்.

[70546]

## க.பொ. செல்வநாயகம்

சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்திதேவஸ்தான பங்காளரில் ஒருவராகிய க. பொ. செல்வநாயகம் 29.10.99 அன்று கொழும்பில் அமரராகி விட்டார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. க. சண்முகதாசன்
நிர்வாகப் பங்காளர்,
இலுப்பைத்தாள் முருகமூர்த்தி
தேவஸ்தானம்,
சங்கானை.

தேவாலய வீதி, சங்கானை.

[70554]

## திருமதி சின்னம்மா விஜயரட்ணம்

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வவுணத்தம்மை வீதி, குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா விஜயரட்ணம் 29-10-99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான விஜயரட்ணம் அவர்களின் மனைவியும், ஜெகதீசன் (லேக்ஹவுஸ்—கொழும்பு), சதீசன் (கணக்காளர்—சிங்கப்பூர்). விஜிதா (டென்மார்க்), அஜிதா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாலிங்கம், திருமதி அ. சிவபாக்கியம், திருமதி பா. கண்மணி ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், திருமதி ச. இளமதி, உதயகுமார்(டென்மார்க்) ஆகியோரின் மாமியாரும்ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(31-10-99) ஞாயிற்றுக்கிழமை இல. 17, சுதர்சனா றோட், தெகிவளையில் நடைபெற்றுபூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொழும்பு T. P-NO-077302608

தகவல்:
கதிரேசு மகாலிங்கம்
(சகோதரன்)

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(70527)

## திருமதி கணபதிப்பிள்ளை கனகம்மா

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை கனகம்மா 29.10.99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் [முன்னாள் பிரிட்டிஷ்கடற்படை] அன்பு மனைவியும், கமலநாதனின் (யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்] பாசமிகுதாயாரும் பரமேஸ்வரியின் அன்பு மாமியும். கபிலன், கஜிபன், யாழ்.இந்துக் கல்லூரி], கபிலா, கஸ்தூரி (கொக்குவில் [இந்துக் கல்லூரி), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்30.10.99இல்அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் தாவடி மயானத்தில் நடைபெற்றன என்பதை அறியத் தருகின்றேன்.

தகவல்:-
க.கமலநாதன்
(மகன்)

சுதுமலை வடக்கு.

(70530)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மிட்சுஇ — ஜெசிபா வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பம்

## யாழ்.- திருமலை அணிகள் மோதுகின்றன

யாழ்ப்பாணம், ஒக். 31

மிட்சுஇ -ஜெசிபா வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்ட அணிகள் பங்குபற்றும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது

யாழ் மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் இந்தச் சுற்றுப் போட்டியில் இன்றைய முதல் நாள் யாழ் மாவட்ட அணி திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து விளையாடும்.

இன்று விளையாடும் யாழ். மாவட்ட அணி விவரம் வருமாறு:-

கே. சசிகரன் [அணித் தலைவர்], ஏ. எஸ். நிஷாந்தன் [உதவிஅணித்தலைவர்], எஸ். எஸ் பாஸ்கரன், வி பி. சுபாஸ்கரன், பி. சஞ்சீவ், எஸ். சிவராஜா, ஆர். சு...ஷன், என் சுதேஸ்குமா..., எஸ். சபாநந்த், ஜே. வீர..., கம், ஏ. ரி. கௌரிபாக..., அணி முகாமையாளர்:- ச... தயாளன், பயிற்றுநர்:- ... கே. சண்முகலிங்கம்.

திருமலை மாவட்ட அ... விவரம் வருமாறு:-

ஆர். பார்த்திபன் [அணி தலைவர்], எஸ். மதிவதன [உதவி அணித்தலைவர்], ... இளவழகன், எஸ். ஜி. ம... யூஸ், கே. றொஷான், எ... உமாசங்கர், ரி. சத்தியா, ஜி. கே. டபிள்யூ. கிருஷாந்த், கே. சுதாகரன், ஏ. சிவநாதன், என். கிருஷ்ணதேவா, அணி முகாமையாளர்:- என். ஸ்ரீமனோகரன், பயிற்றுநர்:- எல். ஆர். எம். மங்கள தர்மசேன.

இன்றைய ஆட்டத்துக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ.மகாலிங்கம் கலந்துகொள்வார். [இ-8]

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 31

சென். நிக்கிளாஸ் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சென். நிக்கிளஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சென் நிக்கிளஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3-30 மணிக்கு றோயல் வி. க. எதிர் சென் அவரனீஸ் 'பி' வி. க

★ மாலை 4-30 மணிக்கு சென். அன்ரனீஸ் வி. க. எதிர் பாடுர்மீன் 'பி' வி. க.

## நியூஸிலாந்து 18ஓட்டங்கள்

அகமதாபாத், ஒக்...

இந்திய — நியூஸிலா... அணிகளுக்கிடையில் அகம...பாத்தில் நடைபெறும் மூ...றாவது டெஸ்ட் கிரிக்கெ... போட்டியின் இரண்ட... நாளான நேற்று நியூஸிலா... அணி ஆட்ட நேர இறுதி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்திருந்தது.

முன்னதாக 311 ஓட்... களுக்கு 3 விக்கெட்டுக்க... இழந்த நிலையில் நேற்... துடுப்பெடுத்தாடக் களமி... கிய இந்திய அணி 7 விக்கெ...டுக்களை இழந்து 583 ... டங்களைப் பெற்றவே... தனது முதல் இன்னிங்... நிறுத்திக்கொண்டது.

இந்திய அணி சார்... அணித் தலைவர் சச்... டெண்டுல்கர் தனது டெ... கிரிக்கெட் வரலாற்றில் மு...லாவது இரட்டைச் ச... அடித்தார். சௌரவ் கங்கு... சடகோபன் ரமேஷ் ஆ...யோர் சதம் அடித்தனர். (இ-4-8)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மாவட்டக் கூடைப் பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான ஒன்று கூடல் இன்று மாலை 4-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். அனைத்து மத்தியஸ்தர்களையும் கூட்டத்துக்கு சமுகம் தருமாறு யாழ்மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் கேட்டுள்ளது. [இ-8]

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்)

ஜெனரேட்டர்களில் இரண்டு பழுதடைந்து விட்டன. இதனால் இப்பொழுது 8 மெகா வோட்ஸ் மின்சாரத்தை மட்டுமே உற்பத்தி செய்ய முடிகிறது.

இந்த மின்சாரத்தின் அளவு குடாநாட்டு மக்கள் அனைவரது பாவனைக்கும் போதுமானதல்ல. எனினும் மின் பாவனையாளர்களின் வசதிக்கேற்ப மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்க இலங்கை மின்சார சபை முழு முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

## அம்பகாமத்தில்...

[முதலாம் பக்கத் தொடர்]

2 ஆம் லெப். இளங்கீரன் (கந்தசாமி மனோரூபன் யாழ்ப்பாணம்)

★ லெப். கௌமாரன் (முருகேந்திரன் சுஜேந்திரன் -முல்லைத்தீவு)

★ மேஜர் மருதன் (ராசரத்தினம் சுகுமார் - யாழ்ப்பாணம்)

★ 2 ஆம் லெப். ஆனந்த் (ஐயாத்துரை இலங்கேஸ்வரன் - மட்டக்களப்பு)

★ லெப். பண்கவி (மகாகிருஷ்ணன் சிவகுமார் - முல்லைத்தீவு)

★ லெப். குட்டிமணி (சண்முகராசா அருமருந்தன் -கிளிநொச்சி)

★ 2 ஆம் லெப். தனிச்சுடர் -கிருஸ்டின் கிருஷ்ணகுமார் (கொழும்பு)

★ 2 ஆம் லெப். புதியவன் (காஸிதாஸன் புவனேந்திரன் - வவுனியா)

★ 2 ஆம் லெப். புலிக்குட்டி (சற்குணராசா உதயராசா - திருகோணமலை)

★ கப்டன் அன்பழகி (பாலசுந்தரம் சுமதி - வவுனியா)

★ 2 ஆம் லெப். ஜீவிதா (துரை சூரியகலா-வவுனியா)

★ லெப். தோகைமணி (சுந்தரலிங்கம் தோணேஸ்வரி - யாழ்ப்பாணம்)

★ மேஜர் ஆனந்தி (மேரி அஜந்தா - முல்லைத்தீவு)

★ அகல்வாணி (தீபன் புனிதசீலி - யாழ்ப்பாணம்)

★ குட்டி (துரையன் கமலேஸ்வரி - யாழ்ப்பாணம்)

★ ... யாழ்ப்பாணம்) [இ-8]

## தேசிய வலைப்பந்தாட்டம்

# கால் இறுதி ஆட்டம் வரை முன்னேறியுள்ள யாழ். அணி!

கொழும்பு, ஒக். 31

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள விளையாட்டு அமைச்சு மைதானத்தில் தற்போது நடைபெற்று வரும் 18 முதல் 22 வயதுக்கு உட்பட்ட யுவதிகளுக்கான தேசிய வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட அணி கால் இறுதி ஆட்டம் வரை முன்னேறியுள்ளது.

மாத்தளை மாவட்ட அணியுடனான ஆட்டத்தில் 26-10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றியீட்டிய யாழ். மாவட்ட அணி பிலிமத்தலாவ அணியுடனான ஆட்டத்தில் 18—13 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்றது. என்றாலும் பிலிமத்தலாவ அணி வயது குறைந்த வீராங்கனைகளை அணியில் சேர்த்துக்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு யாழ். மாவட்ட அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

கண்டியுடன் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ். அணி 31—16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தோல்விகண்டது. நடைபெற இருந்த மற்றைய இரு ஆட்டங்களுக்கு எதிரணிகள் சமுகம் தராததால் யாழ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இன்று களுத்துறை மாவட்ட அணியுடன் ஆட்டத்தில் யாழ். அணி பங்குபற்றும். (இ-8)

# மாணவரிடையே கண்ணிவெடி விழிப்புணர்வு கருத்தரங்குகள்

வலி கிழக்கு, ஒக். 31

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடனான ஐக்கியநாடுகள் திட்ட சேவைகள் அலுவலகத்தினால் கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் யாழ். மாவட்டத்தில் பல பாடசாலைகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ். குடாநாட்டில் அதிகளவில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் உள்ள தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் கல்லூரி, நல்லூர் சென்பெனடி கல்லூரி, கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம், அளவெட்டி அருணோதயக் கல்லூரிபோன்ற பாடசாலைகளிலேயே இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை—

மாணவர்களிடம் இருந்து கண்ணிவெடி சம்பந்தமான கவிதை, கட்டுரை, ஓவியங்களும் இந் நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

# குருநகர்ப் பகுதியில் வாந்திபேதி நோய்

யாழ்ப்பாணம், ஒக். 31

குருநகர்ப்பகுதியில் குழந்தைகள் உட்பட 216 பேர் ஒரு மாத காலத்தில் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் குருநகர் அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போதும் இவர்களுக்கான மருந்து வகைகள் ஆஸ்பத்திரியில் இல்லாததால் வெளியிலிருந்தே பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த முதலாம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரையும் இந்த நோயினால் 216 பேர் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் வாந்திபேதியின் தாக்கம் இப் பகுதியில் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

குருநகர் அரசினர் வைத்திய சாலையில் இதற்கான மருந்து வகைகள் இல்லாமையினால் நோயின்தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகரில் காலாவதியான டொபி வகைகள் மற்றும் அழுகிய நிலையில் மனித பாவனைக்குதவாத உருளைக் கிழங்கு, மாம்பழம், வாழைப் பழம் போன்றவையும் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுளது.

இத்தகைய பொருள்களைக் கொள்வனவு செய்து உட்கொள்பவர்களே வாந்திபேதி நோயினால் பாதிக்கப்படுவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-5-51)

# ஜனாதிபதி பதவி கிடைத்தால் உடன் யுத்தத்தை நிறுத்துவேன்

## வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, ஒக். 31

'ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும் பட்சத்தில் உடன் யுத்தத்தை நிறுத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வுக்காண பேச்சுக்களை ஆரம்பிப்பேன்' என்று ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவிருக்கும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவிருக்கும் அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த 17 வருட காலத்தில் ஐ. தே. க. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் பதவிக்கு வந்தால் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஒன்று கூட்டி தீர்வைக்காண முயல்வேன்—

என்றார். (ஐ-3-160)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

இன்று நடைபெறவிருந்த யாழ் ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியத்தின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். (இ-4)

## அச்சுவேலி ஆஸ்பத்திரியில்

# வைத்திய அதிகாரிகள் தங்க விரைவில் கட்டட வசதி

அச்சுவேலி ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரிகள் தங்குமிடம் அமைப்பதற்கான கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சுகாதார அமைச்சினால் பல லட்சம் ரூபா செலவில் இந்த தங்குமிடக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதே வேளை —

கடந்த பல வருடங்களாக இந்த ஆஸ்பத்திரியில் கட்டப்பட்டு பூர்த்தி செய்யப்படாமல் இருந்த 24 படுக்கைகளைக் கொண்ட வார்ட் கட்டட வேலைகளும் 7 லட்சம் ரூபா செலவில் சுகாதார அமைச்சினால் கட்டப்பட்டு வரும் பற்சிகிச்சை நிலையக் கட்டட வேலைகளும் —

முடிவுறும் தறுவாயில் உள்ளன.

இவை எதிர்வரும் ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-180]

## போக்குவரத்து தொடர்ந்து நிறுத்தம்

வவுனியா, ஒக் 31

வவுனியா-வன்னிப் போக்குவரத்துச் சேவை கடந்த ஒரு வார காலமாக நிறுத்தப்பட்டதால் வன்னிக்குச் செல்ல வேண்டிய 450பேர் வவுனியா நகரில் தங்கியுள்ளனர்.

## ஜனாதிபதிக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

செயலரும் மத்திய பெற்றோலியத்துறை இணை அமைச்சருமான இ. பொன்னுசாமி தெரிவித்தார்.

சென்னை விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். குற்றவாளிகளின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் எனத் தமிழ்நாட்டில் உள்ள மனித உரிமைக் குழுக்களும் வேறு சில அமைப்புக்களும் கோரி வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

தண்டனையை ரத்துசெய்யக்கோரி தமிழக ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கருணை மனுவை அவர் நிராகரித்தது தெரிந்ததே அதைத் தொடர்ந்தே தற்போது ஜனாதிபதி கே. ஆர். நாராயணனிடம் கருணைமனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணமானவர்கள் ஈவு இரக்கமின்றித் தண்டிக்கப்பட வேண்டுமென்று பாரதீய ஜனதாக் கட்சிப் பொதுச் செயலர் வெங்கையா நாயுடு நேற்றுத் தெரிவித்தார்

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் இதனை தெரிவித்தார்.

குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் சட்டப்படி மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் பாரதீய ஜனதாக் கட்சியின் தெளிவான கொள்கை.

இந்தியத் தலைவர் ஒருவருக்கு எதிரான மிகக்கொடுமையான குற்றவியல் வழக்கில் நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பை அளித்துள்ளது. இந்த விடயத்தில் மத்திய அரசாங்கம் எந்தத் தலையீட்டையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடிவீடு விற்பனைக்கு

இலக்கம் 20 ஸ்வாட்ஸ்லேனில் அமைந்துள்ள இரண்டு பரப்பு காணியுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இல. 150. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9579)


## கலைவிழாவும் சித்திரக் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஒக். யாழ். இந்துக் கல்லூரியின் கவின் கலை மன்றம் நடத்து[ம்] இரண்டாம் ஆண்டு க[லை] விழாவும் சித்திரக் கண்காட்[சி]யும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடை பெறும். [இ]

## தொண்டமான்...

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழ்நாட்டின் தென்பகு[தி]க் கிராமம் ஒன்றில் பிறந்த அமைச்சர் எஸ். தொண்ட[மா]ன் இலங்கைத் தோட்டத் [தொ]ழிலாளர்களின் நலனுக்[கா]க பாடுபட்ட மூத்த தமிழ் [அ]ரசியல்வாதியாவார்.

சுதந்திர இலங்கையின் முத[லா]வது நாடாளுமன்றம் [அ]மைக்கப்பட்டபோது அதன் [உ]றுப்பினராக இவர் தேர்ந் தடுக்கப்பட்டார்.

1948 இல் இந்திய வம்சா வளியினரின் குடியுரிமை பறிக் கப்பட்டபோது அதனை மீட் டெடுப்பதிலும் அவர் குறிப் பிடத்தக்க பங்காற்றினார். 1977 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகக் கடமை யாற்றி வந்த அமைச்சர் தொண்டமான் 21 ஆண்டு கள் தொடர்ந்து அமைச்சரா கவும் இருந்துள்ளார்.

அவரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் இன்று அறி விக்கப்படும் எனத் தெரிவிக் கப்பட்டது. (இ-6-21)


கடந்த 28 வருடங்களாக தரமான மதுபானங்களை நிதானவிலையில் மதுப்பிரியர்களுக்கு வழங்கி வரும்

## வாமாஸ்

ஸ்தாபனத்தார்
பெருமையுடன் தருவதுதான்

## றொக்லண்ட்

### மதுபான உற்பத்திப் பொருள்கள்.

கடந்த 7 சகாப்தங்களாக மதுபான உற்பத்தியில் முன்னணியில் திகழும்

### றொக்லண்ட் ஸ்தாபனத்தார்

வழங்கும்

- றொக்லண்ட் சிலோன் அரக்
- றொக்லண்ட் ஒல்ட் அரக்
- றொக்லண்ட் ஒல்ட் அரக் (EXTRA STRONG)
- திரிஸ்ரார் அதிசக்தி சாராயம்
- ஹனப்பியர் பிரண்டி
- றொக்லண்ட் லெமன் ஜின்
- றொக்லண்ட் ட்றை ஜின்

இன்னும் பல

கொழும்பு விலையில் இருந்து ரூபா 30 மட்டுமே கூடுதலாக

தீபாவளிக்கு உங்களை கிக்கென வைக்கப்போகின்றது 'றொக்லண்ட்'

றொக்லண்ட் மதுபானவகைகளை யாழ் நகரில் தருவித்து விநியோகிப்போர்:

### வாமாஸ்

121/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி – 2989

மதுப்பிரியர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவு செய்வது "றொக்லண்ட்"

எண்ணம் வடிவம், அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

(சி/9536)


## அம்பகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்)

டுள்ளனர் என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரி வித்தன. காயமடைந்தவர் கள் போர் முனையில் இருந்து ஹெலிகள் மூலம் அனுராத புரத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டதைக் காணமுடிந்ததாக வவுனியாச் செய்திகள் தெரி விக்கின்றன.

சண்டை தொடர்ந்து இடம் பெற்று வருவதாகக் கூறப்பட்டது.

அம்பகாமம் கிழக்குப் பகுதி யில் மேற்கொள்ளப்பட்ட மட் டுப்படுத்தப்பட்ட 'வோட்டர் ஷெட் – II' இராணுவ நடவ டிக்கை பூர்த்தியடைந்ததாக நேற்று முன்தினம் நடவடிக் கைத் தலைமையகம் தெரிவித் ததுதெரிந்ததே. தற்பொழுது மீண்டும் இப்பகுதியில் மோதல்கள் வெடித்துள்ளன. (இ-5-6-21-164)

## இளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரேத பரிசோதனைகளின் பின் இவரது மனைவியிடம் நேற்றுஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை கடந்த 27 ஆம் திகதி இப்பகுதியில் எஸ். பாக்கியநாதன் [வயது 37[ என்பவர் இனந் தெரி யாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டது குறிப் பிடத்தக்கது. [இ-5-164[


## தீபாவளி திருநாளைஒட்டி அதி விசேஷ கழிவு விற்பனை

- பட்டு, பருத்திப்புடவைகளும்
- ஆண், பெண் இருபாலாருக்குமான றெடிமேட் ஆடைகளும்
- கண்கவர் சாறிகளும்

மொத்த விலையில்
வாடிக்கையாளருக்கு.........

★ அனைத்தும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை

### சீமாட்டி

(புடைவைக் கடல்)
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/9588)

## A/L கணக்கீடு

DAY CLASS
Mr. BALA
ஆரம்பம்:- 3 - 11 - 99
புதன் 8 மணி A.M.
COM, ST. ECO.
வழமையான ஆசிரியர்கள்
SHAMROCK
(சி/9611)

## தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு

ஸ்ரீல் அலுமாரி, முதிரை அலுமாரி, கடை அலுமாரி, கட்டில்கள், வீட்டுப்பாவனைப் பொருள்கள், மற்றும் மரச் செற்றிகள் யன்மார் ஜெனரேற்றர் நஷனல் எயர் கொண்டிசன்

என்பன விற்பனைக்கு உண்டு

நேரம்:
ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
இல–05 கைலாசபிள்ளையார் கோயில் மேற்கு வீதி,
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(சி/9580)

பண்டிகைக்கால தீபாவளித் திருநாளைத் தேர்ந்தெடுக்க யாழ். நகரில் பெரியகடை வீதியில் பிரியமுள்ள புடவையகம் அரிய நிறம் சாறிகளும் ஆடவர், நங்கையர் உடைவகைகளும் பிரியமுடன் வருக! யாவும் பெறலாம் மலிவாய்!

'சிவகணேசன்' புடவையகம் தேடி வாரீர்! பெறுமதிான துணிவகைகள் மலிந்த கூடம் அற்புதம் பாங்கையர் ஜவுளிகள் உறையுமிடம் விரைவில் வருக! மலிவாய்ப் பெறுக!!

## சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

இல. 41, பெரியகடை வீதி, (ஞாயிறு விற்பனை உண்டு) யாழ்ப்பாணம். [70492]

தீபாவளி... தீபாவளி... தீபாவளி...

இன்று முதல் இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக

காவேரியின்

## மலிவு விற்பனை

∘ சேலை வகைகள் ∘ சோளி செற் ∘ பஞ்சாபி வகைகள்
∘ சிறுவர் சிறுமியர்களுக்கான ரெடிமெட் ஆடைகளுடன் பாங்கொக், சிங்கப்பூர் சேட், T சேட், சூட்டிங் வகைகளையும் மற்றும் இன்றைய பல் வகை வண்ணவண்ணத் துணிவகைகளையும்

மலிவு விலையில் தெரிவு செய்திட

## காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9595)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் ... யாழ்ப்பாணம் ... கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அலுவலகத்தில் ... 31 10 1999 இல் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org